

Vol.21, No.1 January 2017

The Official Organ of the Diocese of Thuckalay

# இறையருள்



தெனகா திருநாள் வாழ்த்துகள்



Syro Malabar Youth Movement (SMYM)
Inauguration at Kakkanad



Foundation Stone for Palugal Church Laid



Pre-Christmas Celebration for Priests

The Official Organ of the Diocese of Thuckalay
Volume 21 No : 1 January 2017

# இறையருள்
# IRAIARUL



*Editorial Board*

Patron
His Excellency
**Mar George Rajendran SDB**
Chief Editor
**Fr. Joseph Santhosh**
Executive Editor
**Mr. Soundara Raj**
Associate Editors
**Fr. Thomas Sathianesan**
**Mr. Edwinson**
**Mr. Berlin Athencod**
Published by:
**Fr. Joseph Santhosh**
**Bishop's House**
**Post Box No . 12**
**Thuckalay - 629 175**
**K.K.Dist,Tamil Nadu,India.**
Designed by:
**Berlin Athencod**
Printed at
**Pulari Offset Press**
**Thuckalay**
**Ph:04651-252570**

## உள்ளே...

| | |
|---|---|
| Bishop's Message | 02 |
| திருத்தந்தையிடமிருந்து... | 05 |
| உயர் பேராயரிடமிருந்து... | 12 |
| ஆயர் திருமுகம் | 14 |
| SMYM | 17 |
| இளைஞர் இயக்கம் | 20 |
| திருஅவையும்... | 22 |
| தொன் போஸ்கோ | 24 |
| மறைக்கல்வி | 27 |
| குழந்தை ஈசோ | 30 |
| சிறுமலர் | 31 |
| அருட்சகோதரர்களிடமிருந்து... | 32 |
| இல்வாழ்வு | 33 |
| Feast and B'days | 34 |
| வின்சென்ட் தே பவுல் | 35 |
| மறைமாவட்டச் செய்திகள் | 38 |
| Mission Sunday Collections | 44 |
| Bishop's Engagements | 48 |

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Mobile: +919443281100
Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250833
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

Ref. No. Priests/GR/64/2016

31 December 2016

Greetings from Bishop's House, Thuckalay!

The year 2016 has just faded away into oblivion and has become part of history. Time seems to pass so quickly. It was just the other day people all over the world celebrated New Year 2016. We have now entered into another New Year 2017. At the outset, let me wish you, a prosperous and grace-filled New Year. May it bring into your lives abundance of blessings from the Almighty!

The arrival of a new year is a time of celebration. We celebrate the gift of another year that God has graciously given to each one of us. The New Year signifies that the time has arrived to bid farewell to the by-gone year and to welcome the New Year.

At this juncture, one can ask: what are the great things that happened in the last year that had tremendous influence upon the humanity in general? We can think of Pope Francis' momentous decision to declare the year as Jubilee Year of Mercy as the most important event of last year. Through this announcement and subsequent celebration of the Jubilee, the Pope has taught the world that God is merciful. For him, mercy is the identity card of our God. He is the God of mercy. He is the merciful God. No one can be excluded from the mercy of God. Hence, we as his children must not only receive the mercy of God but also become agents of mercy to one another. Through various acts of mercy, people throughout the world, including our Diocese, celebrated the Jubilee with great fervour and enthusiasm.

A second event that made a great impact in the world was the canonization of Bwlessed Mother Teresa of Kolkata. St Teresa of Kolkata stands as a great epitome of the mercy of God. Through her identification and insertion among the suffering poor of the streets of Kolkata, her initiatives in alleviating their pain and her desire to proffer them dignity that is the right of every human being, she has shown the

world how one can truly live one's life for others. The yeoman service that her Sisters are rendering throughout the world has no rivals. People from every walk of life, irrespective of their religion, creed, caste or language, have come out in support of her humanitarian work. She was revered as a saint already during her lifetime. The recognitions that she received speak volumes for the way the people all over the world have admired her. Hence, the year 2016 will be remembered with fond memories for the recognition that the Church accorded her when Pope Francis canonized her.

Besides these conspicuous events, there are a number of events that have shaped our lives during the past year. Some of them we may remember while others we may have forgotten. Many of them we may have taken for granted without ever thinking of their source. Hence, entering into a new year, we need to sit down and count the blessings that we have received during the past year and thank the Almighty for his bounty. We also need to be grateful to our near and dear ones who have made the past year eventful. There could many others, often unsung heroes, who have played crucial roles in our lives to make the year meaningful. Hence, the virtue gratitude should ring uppermost in our lips as we enter the New Year.

The year that just gone by has also left certain painful memories often due to our own faults or due to the insensitivities of others. Whatever be the case, it is important to seek pardon and forgiveness so that we are at peace as the New Year ushers in. This exercise will also help us to be humble and to accept our own frailties so that we can minimize the recurrence of such conduct.

Let us enter into the New Year with great courage and hope with a firm resolution to grab every opportunity that will come on our way to grow physically, intellectually, psychologically and spiritually. Let us pray that the good Lord who has graciously granted us another year for our development may bless us with his manifold gifts to make the coming year something beautiful for God.

CONCLUSION

We shall celebrate the Denha, the Solemnity of Epiphany, on 6 January 2016. It is an important feast in our Syrian rite. We are entering into a new liturgical period. The word Denha in Syriac means sunrise. Jesus, the Sun, rises and

reveals himself to the world. In fact, we meditate on the triple manifestations or revelations of Jesus Christ, the light of the world. Jesus manifested himself to the three Magi who came from the East to worship Him. During his baptism at River Jordan, we see the Divine Persons of the Holy Trinity declaring the Divinity of Jesus. Finally, we also remember how Jesus manifested himself while he changed water into wine at the wedding feast at Cana. Let us enter into this period with great devotion and prepare our people to accept the Lordship of Jesus Christ, who was born for us in the manger at Bethlehem!

With my prayers and blessings,
Yours in Christ Jesus,

+George Rajendran SDB
Bishop of Thuckalay

## இந்தியத் திருச்சபைச் செய்திகள்

### மும்பை உயர்மறைமாவட்டத்திற்கு இரு புது துணை ஆயர்கள்

இந்தியாவின் மும்பை உயர் மறைமாவட்டத்தின் அருட் தந்தையர்கள், ஆல்வின் டி சில்வா மற்றும் பார்த்தோல் பரேட்டோ ஆகிய இருவரையும், அவ்வுயர் மறைமாவட்டத்தின் துணை ஆயர்களாக, டிசம்பர் 20, 2016 அன்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் நியமிக்கப்பட்டனர்.


### பேராயர் பீட்டர் பெர்னாண்டோ மறைவு

1939 ஆம் ஆண்டு மார்ச் 22 ஆம் தேதி, இடிந்தகரையில் பிறந்த பீட்டர் பெர்னாண்டோ அவர்கள், 1971 ஆம் ஆண்டு தூத்துக்குடி மறைமாவட்டத்தின் அருட்பணியாளராக திருப்பொழிவு செய்யப்பட்டார். 1996 ஆம் ஆண்டு தூத்துக்குடி மறைமாவட்டத்தின் வாரிசுரிமை ஆயராக நியமிக்கப்பட்ட இவர், 1999 ஆம் ஆண்டு மறைமாவட்டத்தின் ஆயராக பதவி ஏற்றார். 2003 ஆம் ஆண்டில் மதுரை உயர் மறைமாவட்டத்தின் பேராயராக நியமிக்கப்பட்ட அவர், 2014 ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார். டிசம்பர் 31, 2016 அன்று



இறைபதம் சேர்ந்த பேராயரின் இறுதிச்சடங்கு ஜனவரி 2, 2017 அன்று தூத்துக்குடியில் வைத்து நடைபெற்றது.

ஆதாரம்-வத்திக்கான் வானொலி




# புலம்பெயர்ந்தோர் மற்றும் நாடோடிகளுக்கான மேய்ப்புப்பணித் திருப்பீடக் குழு

# உலக புலம்பெயர்ந்தோர் மற்றும் அகதிகள் நாளுக்கான திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் செய்தி

ஜனவரி 15, 2017

**புலம்பெயர்ந்த குழந்தைகள், வலுவற்றவர்கள் மற்றும் குரலற்றவர்கள்**

அன்பான சகோதரர் சகோதரிகளே,

"இத்தகைய சிறு பிள்ளைகளுள் ஒன்றை என் பெயரால் ஏற்றுக் கொள்பவர் எவரும் என்னையே ஏற்றுக்கொள்கிறார். என்னை ஏற்றுக் கொள்பவர் என்னை மட்டும் அல்ல, என்னை அனுப்பினவரையே ஏற்றுக் கொள்கிறார்" (மாற் 9:37; காண். மத் 18:5; லூக் 9:48; யோவா 13:20). இயேசுவின் இவ்வார்த்தைகள் சவால் மிக்கது, அதேவேளை அதை வாழ்வாக்குவதற்கான உத்வேகத்தை அவ்வார்த்தைகளே கிறிஸ்தவர்களுக்குக் கொடுக்கிறது. இது, கடவுளை அடைவதற்கான உறுதியான வழி என்பதை இவ் இறைவார்த்தை உறுதிப்படுத்துகிறது. அதாவது, சின்னஞ்சிறியவரை வரவேற்கும் இவ் எளியச் செயலின் போது நம்மீது மீட்பரின் அருள் பொழியப்படுகிறது. தொடர்ந்து, அவ் அருளின் உதவியால், அன்னியரை வரவேற்கும் நற்பணியை நோக்கி வளர்ச்சி அடைகிறோம். அன்னியரை வரவேற்காமல் இருந்தால் கடவுளை நோக்கிய பயணமும் சாத்தியமில்லை; காரணம், கடவுளே நம்முள் ஒருவராக அன்னியராகத்தான் பிறந்தார். குழந்தையாகப் பிறந்த கடவுளை நாம் இயேசுவில் காண்கிறோம். அவர் சின்னஞ்சிறியவராய் வலுவற்றவராக மாட்டுத் தொழுவத்தில் பிறந்தார். அக்கடவுளையே நாம் விசுவசிக்கிறோம். அப்படியானால்,

அவரின் வடிவில் இருக்கும் சின்னஞ்சிறிய வலுவற்றவர்களான அன்னியர்களை நாம் வரவேற்கும் போது, நம்முடைய விசுவாசம் ஆழமாகிறது, ஊட்டம் பெறுகிறது. உடல் மற்றும் ஆன்மா சார்ந்த இரக்கச் செயல்களுக்குள் கிறிஸ்தவ வாழ்வின் அடிப்படை அம்சங் களான அன்பு, விசுவாசம் மற்றும் நம்பிக்கை என்னும் மூன்றும் அடங்கியுள்ளன என்பதை நாம் சிறப்பித்த இரக்கத்தின் சிறப்பு யூபிலி ஆண்டு நினைவூட்டியுள்ளது.

இவ்வாறாக சின்னஞ்சிறியவர் களை வரவேற்கும் இரக்கத்தின் இதயத்துடன் கிறிஸ்தவ வாழ்வை மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தும் நற்செய்தி நூல்கள், அதே வேளையில் அவ்விரக்கத்திற்கு மாறாக செயல்படக் கூடாது எனவும் எச்சரிக்கை விடுக்கின்றன: "என் மீது நம்பிக்கை கொண்டுள்ள இச்சிறி யோருள் எவரையாவது பாவத்தில் விழச்செய்வோருடைய கழுத்தில் எந்திரக் கல்லைக் கட்டி தொங்க விட்டு ஆழ்கடலில் அமிழ்த்துவது அவர்களுக்கு நல்லது" (மத் 18:6; காண். மாற் 9:42; லூக் 17:2). எவ்வித மனசாட்சி உறுத்தலுமின்றி சின்னஞ் சிறியவர்களை சுரண்டி வாழும் மனிதர்களை கண்கூடாகப் பார்க்கும் நாம், இவ்வார்த்தைகள் விடுக்கும் கடுமையான எச்சரிக் கையை புறக்கணிக்க முடியுமா? சுயலாபம் ஒன்றே குறிக்கோளாகக் கொண்டு சுரண்டி வாழும் மனிதர்கள் சிறாரையும் சிறுமியரை யும் விபச்சாரத்திலும் நீலப்படம் எனும் சாக்கடையிலும் தள்ளுகி றார்கள்; சிறுவர் தொழிலாளர்கள், போர்வீரர்கள் என அடிமைகளாக மாற்றுகிறார்கள்; போதைப் பொருட் கள் கடத்தவும் குற்றச் செயல்கள் புரியவும் பயன்படுத்துகிறார்கள்; மேலும், போர்களை உருவாக்கி துன்புறுத்தி அவர்கள் பிறப்புரிமை யாகக் கொண்ட நாட்டிலிருந்து விரட்டி, தனிமையாக்கி, அனாதை யாக்குகிறார்கள்.

மேற்கூறிய இக்காரணங்களால், புலம்பெயர்ந்த குழந்தைகள் குறிப்பாக தனிமையாக்கப்பட்ட குழந்தைகள் சந்திக்கும் அவலங் களைக் குறித்து, இவ் உலக புலம்பெயர்ந்தோர் மற்றும் அகதிகள் நாளை அனுசரிக்கும் வேளையில் உங்களுக்கு எழுத விழைகிறேன். இதை எழுதும் போது, பாதுகாப்பற்ற நிலைக்கு தள்ளப் பட்டுள்ள, ஒவ்வொரு இளம் சிறுவனையும் சிறுமியையும் நீங்கள் பாதுகாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன். காரணம், அவர்களால் அவர்களையே பாதுகாக்க இயலாது. பல்வேறு காரணங்களால், தங்களு டைய நாட்டிலிருந்து விரட்டப்பட்டு குடும்பங்களிடமிருந்து தனிமையாக் கப்பட்டு, அகதிகளாக வந்திருக்கும் ஒவ்வொருவருக்கும் உதவ வேண்டும் என்றும் கேட்டுக்கொள் கிறேன்.

புலம்பெயர்தல் என்பது பூமியில் எங்கோ ஒரு பகுதியில் மட்டும் நடப்பதல்ல. இது அனைத்து

கண்டங்களையும் பாதித்திருப்பதோடு உலக அளவில் பரவிக் கொண்டிருக்கிறது. மாண்புமிக்க வேலை, உயர்தர வாழ்வு என சொந்த நாடு விட்டு புலம் பெயர்பவர்களை மட்டுமே பாதிக்கின்ற காரியம் அல்ல இது. காரணம், இன்று அது, ஆண்கள், பெண்கள், முதியோர், குழந்தைகள், இளையோர் என அனைவரையும் பாதித்திருக்கிறது. இவர்கள், அடைக்கலம் தேடி, அமைதியும் பாதுகாப்பும் கிடைக்கும் என்னும் நம்பிக்கையில் பிறந்த நாடை விட்டு வருகிறார்கள். வலுக்கட்டாயமாக திணிக்கப்படும் புலம்பெயர்தலால் குழந்தைகளே அதிகம் பாதிப்புக்கு உள்ளாயிருக்கிறார்கள்; வன்மத்திற்கும், வறுமைக்கும் உட்படுத்தப்படுகிறார்கள்; சுற்றுச்சூழல் மாற்றங்களுக்கும் உலகமயமாக்கலின் எதிர்வினைகளுக்கும் இவர்கள் இரையாகின்றார்கள். நன்றும் தீதும் பகுத்துப் பார்க்கும் பக்குவம் இழந்த நேரிய வாழ்வற்றவர்கள், கட்டுப்பாடற்ற லாபம் உருவாக்கும் போட்டி மனப்பான்மையுடன் செயல்பட ஆரம்பிக்கிறார்கள்; குழந்தை வர்த்தகம், சிறாரை சுரண்டுதல், தவறாக பயன்படுத்துதல் போன்றவற்றில் ஈடுபடுகிறார்கள். அவ்வாறாக, பன்னாட்டு உலக அமைப்பு வடிவமைத்த, குழந்தை உரிமைக்கு எதிராகச் செயல்படுகிறார்கள்; குழந்தைகளுக்கான உரிமைகளும் மறுக்கப்படுகின்றன.

வலுவற்றவர்களாக இருக்கும் குழந்தைகளுக்கே உரிய மறுக்கமுடியாத தேவைகள் உள்ளன. குறிப்பாக, தாய் தந்தையின் அரவணைப்பையும் மாதிரியையும் கிடைக்க உதவுகின்ற நல்ல ஆரோக்கியமான மற்றும் பாதுகாப்பான குடும்பச் சூழல் குழந்தையின் அடிப்படை உரிமை. மேலும், ஆளுமைமிக்க தனிநபர்களாக உருவாகவும், தங்களுடையும் தங்கள் நாட்டினுடையவும் எதிர்கால நம்பிக்கையின் சக்திகளாக வளர்ந்து வருவதற்கும் உதவுகின்ற கல்வியை, முதன்மையாக குடும்பத்திலும் பிறகு பள்ளிக்கூடத்திலும் கற்பதற்கான கடமையும் உரிமையும் குழந்தைகளுக்கு உண்டு. ஆனால் உலகின் பல பகுதிகளில் இன்றும், வாசிக்கவும், எழுதவும் கணிதத்தின் அடிப்படைகளை கற்கவும் பணம் மிக்க சிலருக்கு மட்டுமே வாய்ப்பு கிடைக்கிறது. மேலும், பொழுது போக்கு விளையாட்டுகளில் ஈடுபடும் உரிமை எல்லா குழந்தைகளுக்கும் உண்டு; ஒரே வார்த்தையில் சொல்ல வேண்டுமென்றால், குழந்தைகள் குழந்தைகளாகவே இருக்க அவர்களுக்கு உரிமை உண்டு.

புலம் பெயர்ந்தோராக வரும் குழந்தைகளே மிகவும் வலுவற்றவர்களாகக் காணப்படுகிறார்கள். காரணம், அவர்களை எதிர்நோக்கி இருக்கும் வாழ்வு எளிதல்ல. தேவையான அடையாள அட்டைகள் இல்லாமல் வரும் இவர்கள்

பொது சமூகத்தின் பகுதியாக மாறவோ தங்களுடைய உரிமைகளுக்காக குரல் எழுப்பவோ இயலாமல் போகிறது. பொதுச் சமூகத்தின் கண்களுக்குப் படாமல் வாழும் அவர்களை வழி நடத்த பெரியவர்கள் இல்லாததால் அவர்களுடைய குரல்கள் எழும்புவதும் இல்லை; எழுப்பினாலும் யாருடைய செவிகளையும் சென்றடைவதும் இல்லை. இவ்வாறாக புலம் பெயர்ந்த குழந்தைகள் மிகவும் மோசமான நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள்; சட்டத்தின் பாதுகாப்பு அற்ற அவர்களின் மீது திணிக்கப்படும் வன்மம் எதிர்காலத்தை நிலைகுலையச் செய்கிறது; அவர்களை தவறாக பயன்படுத்தும் மனசாட்சி அற்றவர்களின் வலையை அறுத்தெறியவும் அவர்களால் இயல்வதில்லை.

இக்கொடுமைகளுக்கு தீர்வு தான் என்ன? நம்மால் என்ன செய்ய இயலும்?

முதலாவதாக, புலம்பெயர்தல் என்பது மீட்பின் வரலாற்றிலிருந்து பிரிக்க முடியாதவாறு பிணைக்கப்பட்டுள்ளது என்பதை அறிந்து கொள்ள வேண்டும். கடவுளே இதை கட்டளையாக நினைவு படுத்துகிறார்; "அன்னியனுக்கு நீ தொல்லை கொடுக்காதே! அவனைக் கொடுமைப்படுத்ாதே. ஏனெனில் எகிப்து நாட்டில் நீங்களும் அன்னியராயிருந்தீர்கள்" (விப 22:21); "அன்னியருக்கு அன்பு காட்டுங்கள்; ஏனெனில் எகிப்தில் நீங்களும் அன்னியராய் இருந்தீர்கள்" (இச 10:19). புலம்பெயர்தல் எனும் நிகழ்வு காலத்தின் ஓர் அறிகுறி. இவ் அறிகுறியானது, உலக மக்கள் அனைவரும் ஒரு குலம் என்னும் நிலையை நோக்கி நம்மை அழைத்துச் செல்வதற்காக வரலாற்றிலும் மனித சமூகத்திலும் செயல்படும் கடவுளின் பராமரிப்பின் கரங்களைக் குறித்து நம்மிடம் பேசுகிறது. புலம் பெயர்தலோடு தொடர்புடைய சோகங்களைக் குறித்தும் துன்பங்களைக் குறித்தும், அவர்களுக்கு அளிக்கப்படும் மாண்பு மிக்க வரவேற்பை கொடுப்பதில் அடங்கியுள்ள சிரமங்களைக் குறித்தும் திருச்சபைத் தாய் அறிந்திருக்கிறாள். இருப்பினும் அதை கடவுளின் திட்டமாகக் கண்டு அன்னியரை வரவேற்கும் மனித மாண்பின் செயலிலே ஈடுபட திருச்சபை கேட்டுக்கொள்கிறாள். "எல்லா நாட்டையும், குலத்தையும் மக்களினத்தையும் மொழியையும் சார்ந்தவர்கள்" (திவெ 7:9) கிறிஸ்தவ சமூகத்தின் பகுதியாக உள்ளனர்; அங்கே அன்னியர் என யாரும் இல்லை. அதனால், குறிப்பாக இதைக் கருத்தில் கொண்டு செயல்பட வேண்டும். ஒவ்வொருவரும் மதிப்புமிக்கவர்கள்; மனிதர்கள் பொருட்களை விட முக்கியமானவர்கள். மேலும், ஒவ்வொரு மனித உயிரையும், குறிப்பாக வலுவற்றோர்களாக காணப்படுவோரை, நமது சூழலில் புலம்

பெயர்ந்த குழந்தைகளை, எவ்வாறு ஒரு நிறுவனம் மாண்புடன் நடத்துகிறது என்பதன் அடிப்படையில்தான் அந் நிறுவனத்தின் மதிப்பு கணக்கிடப்படுகிறது.

மேலும், அவர்களை பாதுகாக்கவும், சமூகத்தில் ஒருங்கிணைக்கவும், நீண்ட கால தீர்வுகளை காணவும் நாமும் இணைந்து செயல்பட வேண்டும்.

புலம்பெயர்பவர்களுக்கு பாதுகாப்பும் காவலும் கொடுத்தலே முதன்மையான பணியாக நம்முன்னால் உள்ளது. காரணம், "இச்சிறாரும் சிறுமியரும் புறக்கணிக்கப்பட்டவர்களாக வீதியில் வாழ நிர்பந்திக்கப்படுகிறார்கள். அங்கே, ஈவிரக்கமற்றவர்களால், உடல் மற்றும் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்படுகிறார்கள்" (திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ட், 2008 உலக புலம்பெயர்ந்தோர் மற்றும் அகதிகள் தினத்தன்று வழங்கிய செய்தி).

இன்னும், ஒரு மெல்லிய கோடுதான் புலம்பெயர்தலையும் மனித வர்த்தகத்தையும் பிரிக்கிறது. புலம்பெயர்வோரை, குறிப்பாக குழந்தைகளை, வலுவற்றவர்களாக மாற்றுகின்ற ஏராளமான காரணிகள் உள்ளன. அவையாவன: வறுமை மற்றும் வாழ்வதற்கான அடிப்படை வசதிகள் இல்லாமை - இதிலே ஊடகங்களும் சமூக ஊடகங்களும் உருவாக்கும் போலி எதிர்பார்ப்புகளும் உள்ளன; போதிய படிப்பறிவின்மை; சட்டங்களையும் செல்கின்ற இடத்தையும் கலாச்சாரத்தையும் மொழிகளையும் குறித்த அறியாமை. இவை அனைத்தும், குழந்தைகள் உடல் அளவிலும் மன அளவிலும் பிறரை சார்ந்து வாழ நிர்பந்திக்கின்றன. இவற்றை எல்லாம் விட, இவர்களை சுரண்டலுக்கும் தவறாக பயன்படுத்துவதற்கும் ஈவிரக்கமற்றவர்களின் தேவைகளே காரணமாக அமைகின்றன. குழந்தைகளைச் சுரண்டி பிழைப்போரின் மீது கடுமையான, வலுவான நடவடிக்கைகள் மேற்கொள்ளவில்லை என்றால், பன்முகம் கொண்ட குழந்தை அடிமைத்தனத்தை தடுத்து நிறுத்த முடியாது.

அதனால், குழந்தைகளின் நலனைக் கருதி புலம்பெயர்ந்தோர், அவர்களை வரவேற்கும் சமூகங்களோடு ஒத்துழைக்க வேண்டும் என்பது மிக மிக அவசியம். பல்வேறு விதமான வன்முறைகளிலிருந்து குழந்தைகளை விடுவித்து பாதுகாப்பு கொடுக்கும் பணியில் ஈடுபட்டிருக்கும் திருச்சபை மற்றும் குடிமச் சமூகங்களையும் நிறுவனங்களையும் மிகவும் நன்றியோடு நினைவு கூருகிறோம். தகவல் பரிமாற்றம், கூட்டாக செயல்படுதல் மேலும் தேவை வரும் நேரங்களில் விரைந்து உதவுதல் போன்றவற்றை தீவிரமாகவும் செயலூக்கத்துடனும் முன்னெடுக்க வேண்டும். இவ்வேளைகளில் எல்லாம் சபை சமூகங்கள் செபம் மற்றும் சகோதர

உறவு வழியாக வெளிப்படுத்தும் ஆற்றல் இன்றியமையாததாக அமைகிறது; இதை நாம் மறத்தல் கூடாது.

இரண்டாவதாக, புலம் பெயர்ந்த குழந்தைகளையும் இளையோரையும் நாம் சமூகத்தில் ஒருங்கிணைக்க வேண்டும். இது முழுக்க முழுக்க பெரியவர்களையே சார்ந்துள்ளது. பல வேளைகளில் போதிய பொருளாதாரமின்மை, சமூக ஒருங்கிணைப்பிற்குத் தேவையான கொள்கைகளை உருவாக்க தடையாக இருக்கிறது. அதன் விளைவாக, இவர்களை வரவேற்கவோ, பிற நாடுகளோடு ஒத்துழைக்கவோ முயற்சிக்காமல், வேலிகளை போட்டு, புலம் பெயர்ந்தோர் உள்ளே நுழையாதவாறு தடுக்கும் நிலையும் ஏற்படுகிறது. இது, சட்டத்திற்கு புறம்பான மனித வணிகத்தை ஊக்குவிக்கிறது. மேலும், புலம் பெயர்ந்தோரின் நலன்களை கருத்தில் கொள்ளாமல் திருப்பி அனுப்பும் பணிகளும் நடக்கிறது.

புலம் பெயர்ந்த குழந்தைகளின் நிலையை புரிந்து கொண்டு ஏற்றுக்கொள்ள மறுக்கும் போது, அவர்கள் குற்றப் பின்புலம் உடைய குழுக்களுக்கு இரையாகிறார்கள். திரும்பிச் செல்லவோ நல்ல வாழ்க்கை ஆரம்பிக்கவோ பணமில்லாத அவர்கள், பிடிக்கப்பட்டு அகதிகள் முகங்களில் அடைக்கப்படுகிறார்கள்; சிறைகளில் தள்ளப்படுகிறார்கள். அங்கே பலவிதமான வன்முறைகளுக்கு உட்படுத்தப்படுகிறார்கள். இவ்வேளைகளில், தத்தமது நாட்டினுடைய எல்லைகளில் வேலி போட்டு, புலம்பெயர்வோரை வரவை கட்டுப்படுத்தும் வேலைகளில் ஈடுபடும் நாடுகள், அதேவேளையில் புலம்பெயர்ந்த குழந்தைகளின் மனித மாண்பை கருத்தில் கொண்டு அவர்களுக்கு உதவி செய்ய மனம் கொள்ள வேண்டும். இவ்வுதவி அவர்களுடைய பெற்றோர் மற்றும் முழு குடும்பத்தினுடையவும் நலனைக் கருத்தில் கொண்டதாக அமைய வேண்டும்.

இப்பணிகளை முன்னெடுக்கும் போது நாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பும், பொது கொள்கைகளும் அவசியமாகிறது. இதை முதன்மையாக, அக்குழந்தைகளின் சொந்த நாட்டுத்தலைவர்களும் வந்தடைந்திருக்கும் நாட்டுத் தலைவர்களும் ஒருங்கிணைந்து மேற்கொள்ள வேண்டும்.

மூன்றாவதாக, நீண்ட கால தீர்வுகளை உருவாக்குவதில் அனைவரும் ஈடுபட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். புலம் பெயர்தல் என்பது ஒரு குழப்பம் மிக்க நிகழ்வாக இருப்பதால், அது உருவாகும் இடத்திலேயே அதைக் கையாள வேண்டும். போர்கள், மனித உரிமை மீறல்கள், ஊழல், வறுமை, சுற்றுச்சூழல் சமநிலையின்மை மற்றும் பேரிடர்கள் போன்றவை இதற்கு காரணமாக அமைகின்றன. இவற்றில் எல்லாம்

குழந்தைகளே பெருமளவு பாதிக்கப் படுகிறார்கள். துன்புறுத்தல்கள், மனித வர்த்தகம், வன்முறைகள் போன்றவை குழந்தைகளின் மீதே மிகுதியாக இழைக்கப்படுகின்றன.

அதனால், புலம்பெயர்த லுக்கு காரணமாக அமையும் இந்த ஊற்றுக்கண்களை அடைத்தாக வேண்டும். இதைச் செயல்படுத்த, மக்களை பிறந்த மண்ணை விட்டு ஓடச்செய்கின்றவன்முறைகளையும் போர்களையும் தடுத்து நிறுத்தி அமைதியை உருவாக்க உலக சமூகம் முழுமையாக முன் வர வேண்டும். போர்களாலும் அமைதி யின்மையாலும் அநீதிகளாலும் நிலைகுலைந்து போன நாடுகளை வளர்ச்சியடையச் செய் வதற்கு ஏற்ற செயல்திட்டங்களை தொலை நோக்குப் பார்வையுடன் வகுத்துச் செயல்படுத்த வேண்டும். அவ்வ ளர்ச்சி திட்டங்கள், மனித குலத்தின் எதிர்காலமான சிறார் சிறுமியரின் நலனை கருத்தில் கொண்டதாக அமைய வேண்டும்.

கடைசியாக, புலம் பெயர்ந்த குழந்தைகளை கரம் பிடித்து வழிநடத்தும் பணியில் ஈடுபட்டி ருக்கும் அன்பர்களே, நான் உங்களுக்குச் சொல்வதெல்லாம் இதுதான்: அவர்களுக்கு உங்க ளுடைய விலைமதிக்க இயலா உதவி தேவை. நீங்கள் புரியும் பணி திருச்சபைக்கு தேவையாக இருப்பதோடு, உங்களது பணிக்குத் தேவையான அனைத்து உதவி களையும் வாக்களிக்கிறது. சின்னஞ்சிறிய வலுவற்ற அன்னி யர்களை வரவேற்க கற்பிக்கும் நற்செய்தியின் படிப்பினையை கடைப்பிடிப்பதில் நீங்கள் தளர வேண்டாம். மனத்திடம் கொள் ளுங்கள்.

புலம்பெயர்ந்த குழந்தை களையும், அவர்களுடைய குடும் பங்களையும், அவர்களுடைய சமூ கங்களையும், மேலும் அவர்களு டைய உற்றார் உறவினர்களையும் நாசரேத் திருக்குடும்பத்தின் பாது காப்பில் நான் ஒப்படைக்கிறேன். அக்குடும்பம் உங்கள் வாழ்க்கைப் பாதையில் பாதுகாப்பாய் இருப் பதாக. செபங்களுடன் திருத்தூது ஆசீர்வாதத்தை அளிக்கிறேன்.

வத்திக்கான், செப்டம்பர் 8, 2016.

திருத்தந்தை பிரான்சிஸ்




படைப்பாற்றல் மிக்க இரக்கத்தின் செயல்களை, புதுப்புது முன்னெடுப்புகள் மூலம், பலன்மிக்கதாக்க ஏற்றத் தருணம் இதோ வந்துவிட்டது.
இன்றைய தினம், உங்களுடைய கடந்தகாலத்தை ஒருகணம் நினைத்துப் பார்த்து, கடவுளிடமிருந்துப் பெற்றுக் கொண்ட அளவற்றக் கொடைகளுக்காக நன்றி கூறுங்கள்

## சீரோ மலபார் திருத்தொண்டு வாரம் (6-12 ஜனவரி 2017)

## உயர் பேராயரின் சுற்றுமடல்

சீரோ மலபார்த் திருச்சபையின் உயர் பேராயர்,
ஜார்ஜ் கர்தினால் ஆலஞ்சேரி அவர்கள்,
அனைத்து பேராயர்களுக்கும் ஆயர்களுக்கும் குருக்களுக்கும்
இருபால் துறவியருக்கும் பொதுநிலையினருக்கும் எழுதுவது.

இறை இயேசுவில் அன்பான சகோதரர் சகோதரிகளே,

சீரோ மலபார்த் திருச்சபையின் திருத்தொண்டு ஆர்வமானது உலகளவில் கண்கூடாகக் காணக் கிடக்கிறது. இத்தாயின் பிள்ளைகள் உலகின் பெரும்பான்மையான நாடுகளில் திருத்தொண்டுப்பணி யாளர்களாக சேவைபுரிந்து வருகிறார் கள். இது, இத்தாய் தனக்குள்ளேக் கொண்டிருக்கும் ஆழமான ஆன்மீக வாழ்வின் பிரதிபலிப்பு என்பதே உண்மை. "இந்தியாவே உனது மீட்பு உன் மக்களாலேயே நிகழும்" என்னும் திருத்தந்தை பதிமூன்றாம் லியோ (பதிமூன்றாம் சிங்கராயர்) அவர்களின் வார்த்தைகள், சீரோ மல பார்த் திருச்சபையின் திருத்தொண்டு பணிகளின் தொடக்கத்திற்கான ஒரு அழைப்புமணியாக இருந்ததாகக் கொள்ளலாம். உலகின் பல்வேறு பகுதிகளில் சேவைபுரியும் திருத் தொண்டுப்பணியாளர்களுள் பலர், சிறுமலர் மிஷன்லீக் இயக்கம், CLC இயக்கம் ஆகியவற்றால் உந்துதல் பெற்றவர்கள் என்பது நம்மை மிகவும் பெருமிதம் கொள்ள வைக்கிறது.

ஆண்டவராகிய ஈசோவின் கட் டளைக்கு இணங்க திருத்தூதர்கள் நற்செய்தி அறிவிப்பதற்காக உலகின் கடையெல்லைவரை சென்றார்கள் (மாற் 16:15). திருத் தூதர்களிடம் விளங்கிய இந் நற்செய்தி ஆர்வத்திற்கு உயிரூட்டம் கொடுப்பதற்காகவே சீரோ மலபார்த் திருச்சபையில் திருத்தொண்டு வாரம் கொண்டாடப்படுகிறது. "நற்செய்தி அறிவிப்பதே திருச்சபையின் இயல்பான பணி" (AG 2); மேலும் விசுவாசிகள் ஒவ்வொருவரும் நற்செய்தி அறிவிப்பாளர்கள் அல்லது திருத்தொண்டுப் பணியாளர்கள். ஆகையால் ஒவ்வொருவரும், தங்க ளுக்கு வாய்க்கப்பெற்றிருக்கும் திற மைக்கு ஏற்பவும், கிடைக்கும் நேரங்களிலும், அவரவர் பெற்றிருக்கும் இறையழைத்தலின் இயல்புக்கு இணங்க திருத்தொண்டுப்பணிகளில் ஆர்வமுடன் ஈடுபட முனைப்புக் காட்ட வேண்டும் என நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

தெனகாத் திருநாளைத் தொடர்ந்து வரும் ஒரு வாரகாலமானது, அதாவது ஜனவரி 6 முதல் 12 ஆம் தேதி வரையிலான நாட்களில், சீரோமலபார் மிஷன் வாரமாக அனுசரிக்கப்படும். இவ்வொரு வார கால கொண்டாட்டமானது, திருச்சபையில் உள்ள பல்வேறு திருத்தொண்டுப்பணிகளைக் குறித்து அறிந்து கொள்ளவும், திருத்தொண்டுப்பணிக்காக தங்கள்

வாழ்வை அர்ப்பணித்தோரை அன்பு செய்யவும் மிகச்சிறந்த வாய்ப்பாக அமையும். திருத்தொண்டுப்பணி மீது ஆர்வம் உருவாக்கவும் விழிப்புணர்வு ஏற்படுத்தவும், இவ்வொரு வார கால கொண்டாட்ட வேளையில் மறை யுரைகளையும் கலந்துரையாடல் களையும் கருத்தரங்குகளையும் திருத்தொண்டுப்பணியாளர்களின் கூட்டங்களையும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்றுகேட்டுக்கொள்கிறேன். இது, விசுவாசிகளின் மனங்களில் திருத்தூண்டு ஆர்வத்தை தூண்டி எழுப்பும் என்பதில் ஐயமில்லை. நடந்து முடிந்த சீரோ மலபார் ஆர்க்கி எப்பிஸ்கோப்பல் கூட்டத்தின் மைய சிந்தனைகளுள் ஒன்றான எளிய வாழ்வு நமக்குள்ளே திருதொண்டு ஆர்வத்தை மேலும் ஆழப் படுத்த உதவ வேண்டும். ஆடம்பரமான வீண்செலவுகளுக்குப் பயன்படுத்தும் பணத்தை திருத்தொண்டுப் பணிக ளுக்காக ஒதுக்கி வைத்தலே உகந்தது. அதே வேளையில், திருத்தொண்டுப் பணிகளுக்காக தனி நபர்களும் நிறுவனங்களும் எவ்வளவு பணத்தை ஒதுக்கி வைக்கிறார்கள் என்பதைக் குறித்து இவ்வேளையில் சிந்தித்தலும் நல்லதாக இருக்கும். நம்முடைய விசுவாச வாழ்வின் கனிகளாக நமக்குள் விளங்கும் திருத்தொண்டு ஆர்வமும் தாராள மன மும் இருக்கின்றன. சமூகத்திருந்து புறந்தள்ளப்பட்ட மக்கள் மேலும், தத்துக்கள் மேலும் இரக்கம் காட்ட வேண்டும் என்று இடையறாது குரல் கொடுக்கும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களும், சின்னஞ்சிறியோருக்கு செய்கின்ற ஒவ்வொரு எளிய பணியையும் நற்செய்திப் பணியாகக் கண்ட புனித மதர் தெரசாவும் நமக்கு மாதிரிகளாக விளங்குவார்களாக.

காக்கனாடு சீரோமலபார் தலைமைச் செயலத்தில் இயங்கும் மிஷன் சப்போர்ட் அலுவலகத்தின் செயல்பாடுகளைக் குறித்து உங்க ளுக்கு நினைவுப்படுத்தவிரும்புகிறேன். திருத்தொண்டுப்பணிகளை ஒருங்கிணைத்து செயல்படுத்தும் இவ் அலுவலகம் மேற்கொள்ளும் பணிகள் பாராட்டுதற்குரியது. இவ்வலுவலகம் திருத்தொண்டுப்பணியில் ஈடுபட்டிருக் கும் திருத்தொண்டுப் பணியாளர்கள், குருக்கள் மற்றும் துறவறத்தாருக்கு உதவி வருகிறது. குருக்கள் மற்றும் அருட்சகோதரிகளின் பயிற்சியில் பங்கேற்று அவர்களுக்கு உதவ விரும்புவர்கள் மேற்கூறிய அலுவல கத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

"நாமும் செல்வோம், அவரோடு இறப்போம்" என்னும் திருத்தூதர் தோமாவின் வார்த்தைகள், திருத்தொண்டு ஆர்வத்தின் உச்சத்தை நமக்கு உணர்த்துகிறது. திருத்தூதர் மேற்கொண்ட திருத்தொண்டுப் பயணமும், அவர் சிந்திய இரத்தமும் நமக்குள்ளும் திருதொண்டு ஆர்வம் பற்றி எரிய உந்துசக்திகளாக மாற நான் செபிக்கிறேன்.

தந்தை ✝ மகன் ✝ தூய ஆவியின் ✝ பெயரால் நான் உங்களை ஆசீர்வதிக்கிறேன்.

ஜார்ஜ் கார்டினல் ஆலஞ்சேரி
சீரோ மலபார் திருச்சபையின் உயர் பேராயர்

காக்கனாடு மவுண்ட் செண்ட் தோமஸில் செயல்படும், சீரோ மல பார் திருச்சபையின் தலைமைச் செயலகத்திருந்து அக்டோபர், 16, 2016 அன்று வெளியிட்டது.

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Mobile: +919443281100
Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

Pastoral letter No/GR/30/2016

# ஆயர் திருமுகம்

ஈசோ மெசியாவில் அன்பிற்குரிய அருட்தந்தையரே!
அருட்சகோதரிகளே! அன்பு இறைமக்களே!
நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும், ஆண்டவராம்
ஈசோ மெசியாவிடமிருந்தும் அமைதியும் அருளும் உரித்தாகுக.

இறைவன் உலகுக்கு கொடுத்த ஒப்பற்ற பரிசினை நினைவுப்படுத்தும் நாளே கிறிஸ்து பிறப்பு நாள் அல்லது கிறிஸ்துமஸ். இப்பரிசு உலக மீட்பராம் ஈசோ மெசியாவே. இது இறைவன் உலகின் மீது கொண்டுள்ள அன்பின் வெளிப்படுத்துதலே அன்றி வேறொன்றுமில்லை. நமது மறைமாவட்டம், ஊர் மற்றும் உலகம் முழுவதும் பரந்து விரிந்து கிடக்கின்ற விண்மீன் வடிவிலான மின் விளக்குகளும் வானளாவ உயர்ந்து நிற்கும் கிறிஸ்மஸ் மரங்களும், கடைகளில் அலைமோதும் மக்களின் ஆரவாரமும், கிறிஸ்து பிறப்பு விழா கொண்டாட்டத்தின் ஒரு பகுதியே. இம்மனமகிழ்ச்சியான இவ்வேளையில் உங்கள் அனைவருக்கும் கிறிஸ்து பிறப்பு விழா நல்வாழ்த்துகளை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

வருகின்ற டிசம்பர் 25ம் தேதி கிறிஸ்து பிறப்புவிழாவை மிக்க மகிழ்வுடன் கொண்டாடும் நாம், இவ்வேளையில், நமது பார்வையை பின்னோக்கி செலுத்தினால் நமக்கு வரலாற்று உண்மையான கிறிஸ்து பிறப்பு விழாவை காண இயலும். அதேவேளையில் நமது சிந்தனையை முன்னோக்கிச் செலுத்தினால் நம் வாழ்வின் ஒவ்வொரு தளங்களிலும் இணைந்து கிடக்கின்ற அவரது இரண்டாம் வருகையை நம்மால் உணர முடியும். ஆகவே இவ்விருச் சிந்தனைகளும் நாம் ஆன்மீக உணர்வுடனும், இறையனுபவத்துடனும், உயரிய எதிர்நோக்குடனும் வாழ நம்மை அழைத்துச் செல்கிறது.

ஈசோவின் இளமை காலத்தை அழகாக எழுதிய நற்செய்தியாளர்கள், எதிர்பாராத வகையில் நடந்த அவரது பிறப்பை இவ்வாறு கூறிவைத்தனர்: "அஞ்சாதீர்கள், இதோ! மக்களுக்கெல்லாம் மகிழ்ச்சியூட்டும் மாபெரும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று ஆண்டவராகிய மெசியா என்னும் மீட்பர் உங்களுக்காக தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார்" (லூக்கா 2:11). இவ்வாறு மாட்டுத் தொழுவத்தில் பாலனாக பிறந்த உலக மீட்பராம் மெசியாவை சாதாரண மக்களே கண்டுணர்ந்தார்கள். தூய

அன்னை மரியாள், தூய யோசேப்பு, ஆட்டிடையர்கள், சீமோன், அன்னா மற்றும் தற்பெருமையற்ற ஏழைஎளிய மக்கள் அவரை ஏற்றுக் கொண்டனர். குழந்தை ஈசோவின் பிறப்பை எதிர் பார்த்து காத்திருந்த அறிவுடை யவர்களும் செல்வந்தர்களுமென கருதப்பட்ட ஞானிகள் கூட அவரை மண்டியிட்டு வணங்கினர். அதற்கு காரணம் இவர்கள் குழந்தை உள்ளம் படைத்தவர்களாகவும் தங்களது தகுதி இன்மையை உணர்ந்தவர்களாகவும் காணப்பட்டார்கள் என்பதே. அவ்வாறு நாமும் இந்த கிறிஸ்து பிறப்பு விழாவை கொண்டாடும் இந்நாட்களில் நாம் நமது தகுதியின்மையை உணர்ந்து எளிமையோடு அவரைக் காண ஆவலோடு செல்லும்போது புல்மெத் தையில் பிறந்த குழந்தையின் மாட்சியை உணரவும் அவரது ஆன்மீக கொடைகளை பெற்றுக் கொள்ளவும் இயலும்.

இறைமகனான ஈசோ மாட்டுக் கொட்டகையில் மட்டும் பிறக்க வில்லை, மாறாக அவரது பிறப்பு இன்றும் இவ்வுலகில் அவரை ஏற்றுக் கொண்டு அவரது இறைத் தன்மையை பறைசாற்றும் ஒவ்வொருவரின் மனதிலும் தொடர் கிறது. இறைமகன் ஈசோவின் அருள் கொடைகளைப் பெற கத்தோலிக்கத் திருச்சபையில் பல ஆன்மீகப் பயிற்சிகள் உள்ளன. அவற்றில் முதன்மையாக கருதப்படுவது, நாம் ஒவ்வொரு நாளும் ஒப்புகொடுக்கும் திருப்பலியே. திருப்பலியின் போது இறைமகன் ஈசோ நற்கருணையின் வடிவில் நம் ஒவ்வொருவரின் இதயங்களிலும் எழுந்தருளி வருகின்றார். எனவே, கிறிஸ்து பிறப்பு விழா திருப்பலியை பக்தியோடு நாம் ஒப்புக்கொடுக்கும் போது, திருப்பலி என்னும் திருவருட்சாதனம், குழந்தை ஈசோவை நேருக்கு நேர் தரிசிக்கும் ஒரு தெய்வீக நிமிடங்களாக நமக்கு அமையும் என்பதில் ஐயமில்லை. காரணம், அப்பத்தில் வீடு என பொருள்படும் பெத்லகேமில் பிறந்த இயேசு, அப்பத்தின் வடிவில் இன்று நம்மில் குடிகொள்ள வரும் நேரம் திருப்பலியே. அவ்வாறே இவ்இறை அனுபவ தரிசனத்திற்கு மிக இன்றியமையாததாக விளங்குவது ஒப்புரவு திருவருட்சாதனம் ஆகும். ஒப்புரவு திருவருட்சாதனம் என்பது இறைவனோடு நாம் கொண்டுள்ள உறவில் பிளவு ஏற்படாமல் இருக்க நமக்கு உதவும் மற்றொரு வழியுமாகும்.

கிறிஸ்துமஸ் என்பது ஒரு பகிர்தலின் விழாவும் கூட என்பதை உங்களுக்குச் சுட்டிக்காட்ட விழை கிறேன். கடவுள் தனது இறைத் தன்மையை மனிதனோடு பகிர்ந்து கொள்ள முதல் முயற்சி எடுத்தார். அவ்வாறே, நம்மை இறைதன்மை உடையவர்களாக மாற்ற இறைவன் மனிதத்தன்மையை ஏற்றுக் கொண்டார். அவர் மனிதத்தன்மையை ஏற்று மனிதனாக இவ்வுலகில் பிறந்த நாளையே நாம் கிறிஸ்துமஸ் விழாவாக கொண்டாடுகிறோம். எனவே, இவ்விழாவில் நமக்கு இறைவன் தந்துள்ள அருள்கொடைகளை நாம்

நமது சகோதர சகோதரிகளோடு பகிர்ந்து கொள்ளும் போது! நமது கிறிஸ்துமஸ் விழா முழுநிலையை அடைகிறது. புனித பவுல் கொரிந் தியருக்கு எழுதிய 2ஆம் திருமுகம் 9ஆம் அதிகாரம் 7ஆம் வசனத்தில் "முகமலர்ச்சியோடு கொடுப்பவரே கடவுளின் அன்புக்கு உரியவர்" என்று கூறினார். இவ்வார்த்தைகளை தனது வாழ்வில் ஏற்று, நம் ஒவ்வொருவருக்கும் ஒரு எடுத்துகாட் டாக வாழ்ந்து காட்டியவர்தான் புனித அன்னைத் தெரசா. நாமும் அவரது பாதச்சுவடுகளை பின்பற்றி கடவுளின் அன்புக்குரியவராவோம்.

அன்பான இறைமக்களே, இவ்வருடம் நமது பங்குகளுக்கும் மறைமாவட்டத்துக்கும் நம் ஒவ் வொருவருக்கும் இறை ஆசீர் ஏராளமாக பொழியப்பட்ட வருடமாக அமைந்தது. அவைகளின் ஒரு சிறு செய்திகளை என்னுடைய கிறிஸ்மஸ் வாழ்த்து அட்டை வழியாகக் உங்கள் இல்லங்களுக்கு அனுப்பியுள்ளேன். அவைகளை நாம் வாசித்து இறை வனுக்கு நன்றி கூறுவதோடு, மேலும் தாராளமான இறைகொடைகளை பொழிய இறைவனோடு செபிப்போம். அவ்வாறே நாம் இறை நம்பிக்கையில் வளர நமது மறைமாவட்டம் எடுத்த எல்லா முயற்சிகளுக்கும் நீங்கள் கொடுத்த ஒத்துழைப்புக்கும், உதவிக்கும் உங்கள் அனைவருக்கும் நன்றி கூறுகின்றேன்.

ஈசோ மெசியாவில் அன்பான வர்களே, இத்தருணத்தில் உங்கள் அனைவருக்கும் எனது மனமகிழ்ந்த கிறிஸ்து பிறப்பு விழா நல்வாழ்த் துகளை தெரிவிப்பதோடு, இறை யருள் நிறைந்த ஒரு புத்தாண்டையும் இறைவனிடமிருந்து நீங்கள் பெற வாழ்த்துகிறேன். அத்தோடு குழந்தை ஈசோவோடு இணைந்து வாழும் ஒரு விசுவாச அனுபவம் நம் ஒவ்வொருவருக்கும் கிடைப்பதற்காக இறைவனிடம் உருக்கமாக செபிக்கிறேன்.

இறைவன் உங்களையும் உங்கள் குடும்பத்தையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக!

என்றும் ஈசோ மெசியாவில்

+ஜார்ஜ் இராஜேந்திரன் SDB
தக்கலை மறைமாவட்ட ஆயர்

குறிப்பு: டிசம்பர் 18ம் நாள் ஞாயிறு திருப்பலிக்கிடையே இத்திருமுகம் வாசிக்கவும்.




உலகெங்கும் அமைதியும் இரக்கமும் நிலவி, மனித மனங்களை ஆட்கொள்ள வேண்டி, கடவுளின் தாயாம் மரியாவிடம் இப்புத்தாண்டை நாம் கையளிப்போம். அன்றாட வாழ்வில் நம்மோடு உடன் பயணிக்க ஆண்டவர் மனிதராகிறார்.

**SYRO MALABAR YOUTH MOVEMENT (SMYM)**

Mount St. Thomas, Kakkanad P.O.682030, P.B No:3110,
email: smymglobal@gmail.com, www.smymglobal.org, Ph:9495868584

| Mar Joseph Pandarasseril | Mar Ephrem Narikulam | Mar Jose Puthenveettil |
|---|---|---|
| Chairman, Commission for Youth | Commission Member | Commission Member |

காக்கனாடு: 15/12/2016

அன்புக்குரிய இளையோரே மற்றும் இளையோர் பணியாளர்களே,

இளமை மனித வாழ்வின் துடிப்புமிக்க இனிமையான கால கட்டம். செயலூக்கத்தாலும் துணிச்சலாலும் அழகுறு தோற்றத்தாலும் திருச்சபையையும் சமூகத்தையும் வழிநடத்த ஆவல்கொள்ளும் காலமது. அவ்வாவலானது இறை இயேசுவின் ஒளியாலும், திருச்சபைத் தலைவர்களுக்கு காட்டும் கீழ்ப்படிதலாலும் அன்பாலும் வழி நடத்தப்படுமாயின் ஏராளமான கனிகளை விளைவிக்க முடியும் என்பதில் ஐயமில்லை. கலாச்சார வளர்ச்சியின் விளைவாக இளையோருள் பலர் பிறமாநிலங்களிலும் வெளிநாடுகளிலும் புலம்பெயர்ந்து வாழ்கிறார்கள். உலகின் எப்பகுதியில் இளையோர் வாழ நேரிடினும், அவர்களை திருச்சபைத் தாய் சொந்தமென நேசிப்பதோடு அவர்களை அரவணைத்து தன்னோடு இணைத்து நிறுத்த இடையறாது முயல்கிறது; அவர்களுக்கு விசுவாசப் பயிற்சி அளிக்கவும் தனிக்கவனம் செலுத்துகிறது. 'தங்களுக்கே உரித்தான தனிச் சபையிலிருந்தும் இறைவழிபாட்டு மரபிலிருந்தும் ஆன்மீக முறைமையிலிருந்தும் திருச்சபை உறுப்பினர்கள் விலகிச் சென்றால், அது ஒட்டுமொத்த சபையை பலவீனமாக்கிவிடும்' (கீழைத் திருச்சபைகள், 4d) என இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கம் அறிவுறுத்துகிறது. இக்காரணங்களின் பொருட்டு சீரோ மலபார்த் திருச்சபையைச் சார்ந்த இளையோரை ஒன்றிணைத்து ஆற்றல்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாயமாக மாறியிருக்கிறது. அதற்காக முன்னெடுக்கப்படும் முயற்சிகளைக் குறித்துக் கீழ் காண்போம்.

1972 ஆம் ஆண்டு முதல், இந்தியக் கத்தோலிக்கச் சபையில், பல்வேறு பெயர்களின் கீழ் இளையோர் இயக்கங்கள் இயங்கி வருகின்றன. ஆனால், இவையனைத்தும் இந்தியாவில்காணப்படும் மூன்று தனிச்சபைகளின் உறுப்பினர்களையும் உள்ளடக்கியதாக இருந்தன. இதனால், ஒவ்வொருத் தனிச் சபையும் தங்களுக்கே உரித்தான மரபுக்கேற்ற விசுவாசப் பயிற்சியை கொடுக்க இயலாமல் போயிற்று. இதை ஒரு குறையாகக் கண்ட இந்தியக் கத்தோலிக்க ஆயர் பேரவை, இளையோருக்கு இப்பயிற்சியைக் கொடுப்பதன் அவசியத்தை வலியுறுத்தியது. இதன் அடிப்படையில், சீரோ மலபார் இளையோர் இயக்கம் (SMYM)

என்ற அமைப்பும், சீரோ மலபார் ஆணையமும் உருவாக்கப்பட்டன. தாய் நாட்டிலிருந்து, இந்தியா மற்றும் உலகின் பல்வேறு பகுதிகளில் புலம் பெயர்ந்து வாழும் இளையோரை ஒருங்கிணைக்கவும் தாய்த்திருச்சபையோடு சேர்த்து நிறுத்தவும், பராமரித்துக் காக்கவும், விசுவாசப்பயிற்சி கொடுக்கவும் இவ்வமைப்புகள் உருவாக்கப் பட்டுள்ளன. "கீழைத் திருச் சபைகள் செழித்தோங்க வேண்டும் எனவும், தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட பணியைத் திருத்தூதுப் புத்துணர்வோடு நிறைவேற்ற வேண்டும் எனவும் திருச்சபை விரும்புகிறது" (கீழைத் திருச்சபைகள், 1) என, திருச்சபைத் தந்தையர்கள் வெளிப்படுத்திய ஆவலை, எஸ்.எம்.ஒய்.எம். என்னும் இயக்கம் வழியாக நடைமுறைப் படுத்த முடியும் என நம்புகிறோம்.

சீரோ மலபார்த் திருச்சபையைச் சார்ந்த இளையோர் இயக்கங்களின் கட்டுப்பாட்டையும் ஒருங்கிணைப்புப் பணிகளையும், சீரோ மலபார் இளையோர் ஆணையத்தின் வசம் ஒப்படைக்க, சீரோ மலபார் ஆயர் பேரவை தீர்மானித்துள்ளது. ஆயர் மார் ஜோசப் பண்டாரசேரி அவர்கள் இவ்வாணையத்தின் தலைவராகவும், மார் எப்ரேம் நரிகுளம் மற்றும் மார் ஜோஸ் புத்தன்வீட்டில் ஆகியோரை இதனுடைய உறுப்பினர்களாகவும், உயர் பேராயர் மார் ஜார்ஜ் ஆலஞ்சேரி அவர்களால் நியமிக்கப் பட்டுள்ளனர். மேலும், அருட்தந்தை செபாஸ்டின் கைப்பன்பிளாக்கல் அவர்களை இளையோர் ஆணையத்தின் செயலராகவும், திரு சிஜோ அப்பாட்டு அவர்களின் தலைமையின்கீழ் ஒன்பது உறுப்பி னர்கள் கொண்ட குழுவை, சீரோ மலபார் இளையோர் இயக்க (SMYM) செயற்குழுவாகவும், மேற்குறிப்பிட்ட இளையோர் ஆணையத்தால் நியமிக்கப்பட்டுள் ளனர்.

சீரோ மலபார்த் திருச்சபையின் அதிகாரபூர்வமான இளையோர் இயக்கமான, எஸ்.எம்.ஒய்.எம் - இல், 15 வயது முதல் 30 வயது வரையிலான அனைத்து இளையோரும் உறுப்பினர்களாக இருக்க வேண்டும் என திருச்சபை விரும்புகிறது. நமது சபையைச் சேர்ந்த அனைத்து இளையோரும் இணைந்து செயல்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாக இருப்பதால், பிற இயக்கங்களில் உறுப்பினர் களாக உள்ளவர்கள், அவ்வு றுப்பினர் பதவியை தக்க வைத்துக் கொண்டே எஸ்.எம்.ஒய்.எம் - லும் உறுப்பினர்களாகச் சேர்ந்து செயல் படலாம்.

உலகெங்குமுள்ள, உயர் மறை மாவட்டங்களையும் மறைமாவட் டங்களையும் திருத் தொண்டுத் தளங்களையும் சார்ந்த பங்கு தளங்களிலும் சிறு சமூகங்களிலும் அமைப்புகளிலும் எஸ்.எம்.ஒய்.எம் என்னும் பெயரில் இளையோர் இயக்கத்தை, குறிப்பிட்ட கால வரையறைக்குள் தொடங்கிச், செயல்படுத்தத் தேவையான ஏற்பா டுகளை செய்ய வேண்டுமென்று

அன்போடு கேட்டுக்கொள்கிறோம். ஆயர் பேரவையின் ஒப்புதல் பெற்ற சட்டவிதிமுறைகள் அடங்கிய குறுநூல், ஆயர்களுக்கும் இளையோர்ப் பணி அலுவலகங்களுக்கும் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. உலகின் பல்வேறு பகுதிகளில் சிதறி வாழும் இளையோரை ஒருங்கிணைக்க வேண்டியது காலத்தின் கட்டாயமும் எதிர்காலத் தேவையுமாகும். இப்போது செயல்பாட்டில் உள்ள TCYM (தமிழ்நாடு கத்தோலிக்க இளைஞர் இயக்கம்) மற்றும் ICYM ஆகியவை, மூன்று சபைகளுக்கும் பொதுவான, மாநில மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு அமைப்புகளாக தொடர்ந்து செயல்படும்.

இன்னொன்றையும் உங்களிடம் கூற விரும்புகிறோம். பங்குதளத்தை விட்டு பல்வேறு தேவைகளின் நிமித்தம் வேறு இடங்களுக்குச் செல்வோரை கருத்தில் கொண்டு புலம்பெயர்வோருக்கானப் படிவம் (Migrant Form) ஒன்றை இளையோர் ஆணையம் தயாராக்கியுள்ளது. ஒவ்வொரு பங்குகளையும் சென்றடையும் நோக்குடன், ஆயர்களுக்கு அது அனுப்பி வைக்கப்படும். சொந்தப் பங்குகளை விட்டுச் செல்லும் இளையோர்கள், அதைப் பங்குதந்தையிடமிருந்து பெற்றுச் சென்று, பூர்த்தி செய்தப் படிவத்தை, தாங்கள் செல்லும் இடங்களில் அமைந்துள்ள சீரோ மலபார் அமைப்புகளின் பொறுப்பாளர்களிடம் ஒப்படைத்து, அவ் அமைப்பில் உறுப்பினராக வேண்டும் என்றுக் கேட்டுக் கொள்கிறோம்.

சீரோ மலபார்த் திருச்சபையோடு இணைந்து நிற்க இவ் ஏற்பாடு உதவி புரியும். கவனிப்பாரின்றி தனித்து விடப்படும் இளையோர்கள், எண்ணிலடங்கா ஆன்மீக மற்றும் பொருளாதார சவால்களையும் சிக்கல்களையும் சந்திக்க நேரிடும் என்பது கருத்தில் கொண்டு, இப்படிவத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து, பெற்றோரும் மேய்ப்புப்பணியில் ஈடுபட்டுள்ளோரும் செயல்பட வேண்டும் என அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

எஸ்.எம்.ஒய்.எம் இயக்கத்திற்கு ஆக்கப்பூர்வமான பின்துணை அளித்து, தேவையான ஒத்துழைப்புக் கொடுத்து நம்முடைய இளையோரை நற்செய்தியின் மகிழ்ச்சியை நோக்கி வழி நடத்துவோம்.

ஈசோவில் அன்புடன்,

| | | |
|---|---|---|
| மார் ஜோசப் பண்டாரசேரில் | மார் எப்ரேம் நரிகுளம் | மார் ஜோசப் புத்தன்வீட்டில் |
| தலைவர் | உறுப்பினர் | உறுப்பினர் |

# தக்கலை கத்தோலிக்க இளைஞர் இயக்கம்

## சீரோ மலபார் இளைஞர் இயக்கம்

சீரோ மலபார் திருச்சபை நன்கு வளர்ந்து உலகெங்கும் பலன் கொடுத்து வருகிறது. கேரளா மாநிலத்தோடு குறுகிவிடாமல் சர்வதேச முகம் கொண்ட சபையாக வளர்ந்து விட்ட நிலையில், சீரோ மலபார் திருச்சபையின் பாரம்பரியத்தோடு இளைஞர்களை ஒருங்கிணைக்கவும், வளர்த்தெடுக்கவும் மாபெரும் சக்தியாக உருவாக்குவது காலத்தின் கட்டாயமாகிறது. இதற்காக தனி கொடியும் சட்ட வரையறை, அடையாளம், இயக்கப் பாடல் ஆகியவை தயாரிக்கப்பட்டு உலக அளவில் சீரோ மலபார் இளைஞர் இயக்கம் (SMYM) உருவாக்கப்பட்டது. இதன் முதல் தேசிய மாநாடு நவம்பர் 24 முதல் 26 வரை காக்கனாட்டில் நடைபெற்றது. இம்மாநாட்டில் ஒவ்வொரு மறைமாவட்டத்திலிருந்தும் நான்கு பிரதிநிதிகள் அழைக்கப்பட்டனர். நமது மறைமாவட்டம் சார்பாக இயக்குநர் அருட்தந்தை பெலிக்ஸ் சச, வழிகாட்டி அருட்சகோ. அமலா FCC, இளைஞர் பிரதிநிதிகள் திருமிகு. ஜெசின், திருமிகு. அபிஷா ஜோஸ்லின் கலந்து கொண்டு சிறப்பித்தனர். SMYMத்தோடு இணைக்கப் பட்ட நமது இயக்கமும் நாளடைவில் SMYM தக்கலை அலகு என்றழைக்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

## தலைமைத்துவ பயிற்சி முகாம்

மனித உரிமை நாளை முன்னிட்டு தக்கலை கத்தோலிக்க இளைஞர் இயக்கம் சார்பில் இருநாள் தலைமைத்துவ பயிற்சி முகாம் கல்லுவிளையில் 2016 டிசம்பர் 9, 10 ஆகிய நாட்களில் நடைபெற்றது. டிசம்பர் 9 மாலை 6 மணிக்கு இளைஞர் இயக்கு இயக்குநர் அருட்தந்தை பெலிக்ஸ் அவர்கள் தலைமையில் பயிற்சியின் தொடக்க நிகழ்வு ஆரம்பமாக அருட்தந்தை தங்கச்சன் அவர்கள் முகாமை வழிநடத்தினார். மனித உரிமைநாளான டிசம்பர் 10 சனிக் கிழமையன்று காலை 6.30 மணிக்கு துணை இயக்குநர் அருட்தந்தை சந்தோஷ் அவர்கள் தலைமையில் திருப்பலி நடை பெற்றது. இளைஞர்கள் கடலில் பிற கப்பல்களுக்கு ஒளி தரும் வழிகாட்டி கப்பல்களாக திகழ வேண்டுமென துணைஇயக்குநர்

அவர்கள் மறையுரையாற்றினார். தொடர்ந்து நடைபெற்ற அமர்வை வெள்ளியோடு துணைப் பங்குத் தந்தை அருட்தந்தை விஜின் அவர்கள் "அன்பே நமது வாழ்வின் அடித்தளம்" என்ற சிந்தனையில் கருத்துகளை பகிர்ந்தார். பின்னர் நல்ல தலைவர்களுக்கான பண்புகள், மனித உரிமைகள் என்பது என்ன? இளைஞர்கள் பார்வையில் சமூக அநீதிகள் போன்றவை பற்றி விவாதிக்கப்பட்டு மாலை 5.30 மணியளவில் நிறைவுற்றது. இம்முகாமில் மறைவட்ட இளைஞர் தலைவர்கள், பொறுப்பாளர்கள், பங்கு தலைவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### கிறிஸ்து பிறப்பு விழா

தக்கலை கத்தோலிக்க இளைஞர் இயக்க கிறிஸ்து பிறப்பு விழா கொண்டாட்டமானது 18.12.2016 அன்று படந்தாலுமூடு திருஇருதய அரங்கில் இயக்குநர் அருட்பணி பெலிக்ஸ் சச அவர்கள் தலைமையில் நடைபெற்றது. முதல் நிகழ்வாக கிறிஸ்மஸ் கேரல் போட்டி மறைவட்டங்களுக்கிடையே நடைபெற்றது. தொடர்ந்து நடை பெற்ற கிறிஸ்மஸ் கொண்டாட்ட நிகழ்வில் மறைமாவட்ட நிதியாளர் அருட்தந்தை டென்சி அவர்கள் வருகை தந்து சிறப்புரை வழங்கினார். இளைஞர்களின் கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன. தொடர்ந்து மறைமாவட்ட குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப் பாடம் அவர்கள் கிறிஸ்துமஸ் கேக் வெட்டி விழாவை சிறப்பித்தார். நிறைவில் 'பிளாஷ் மொப்' என்னும் நிகழ்வும் நடத்தப்பட்டது. அனைவருக்கும் கேக் வழங்கப்பட்டது.

செல்வி பபிஷா ஜூலிட்,
தன்னார்வ தொண்டர்.

## வரவிருக்கும் நிகழ்வுகள்

| | | |
|---|---|---|
| ஜனவரி 1, 2017 | - | பேணு ஆலய அர்ச்சிப்பு |
| ஜனவரி 6-8, 2017 | - | சீரோ மலபார் திருத்தொண்டு வாரம் |
| ஜனவரி 14, 2017 | - | மறைமாவட்ட அளவிலான மறைக்கல்வி விவிலியக் கலைவிழா |
| ஜனவரி 16, 2017 | - | அருட்பணிப் பேரவை கூட்டம் |
| ஜனவரி 21, 2017 | - | தக்கலை நண்பர்களின் பொங்கல் கொண்டாட்டம் |
| ஜனவரி 24, 2017 | - | குருக்களுக்கான கூட்டம் |

# கலந்தாய்வரங்கம்— திரு அவையும் பொது வெளியும்




'திரு அவையும் பொதுவெளியும்' என்ற சிந்தனையில் குமரி மாவட்டத்திற்குட்பட்ட கோட்டாறு, குழித்துறை, மார்த்தாண்டம், தக்கலை மறைமாவட்டங்கள் இணைந்த கலந்தாய்வரங்கம் 2016 டிசம்பர் 27 அன்று கல்லுவிளை ஆசீர் அரங்கில் காலை 9.00 மணி முதல் 4 மணி வரை நடைபெற்றது. இதில் நான்கு மறைமாவட்டங்களைச் சேர்ந்த அருட்பணியாளர்கள், அருட்சகோதரிகள், பொதுநிலையினர் கலந்து கொண்டனர்.

இறைவேண்டலுக்குப்பின் மார்த்தாண்டம் மறைமாவட்ட ஆயர் மேதகு வின்சென்ட் மார் பவுலோஸ் அவர்கள் வாழ்த்துரை வழங்க, சேலம் மறைமாவட்ட ஆயர் மேதகு சிங்கராயர் அவர்கள் "பொதுவெளியில் திருத்தந்தை பிரான்சிஸ் ஏற்படுத்திய தாக்கம்" என்ற தலைப்பில் கலந்துரையாடினார். தேநீர் இடைவேளைக்குப் பின் வேளாண்மைத் தொடர்பான விழிப்புணர்வுப் பாடலை இளஞ் சிட்டுகள் பாடினர். தொடர்ந்து சென்னை பல்கலைக் கழக கிறிஸ்தவத் துறை தலைவர் முனைவர் ஞான பேட்ரிக் அவர்கள் "இன்றைய திரு அவையும் பொதுவெளியும்" என்ற சிந்தனையில் தன் இறையியல் கருத்துக்களை வழங்கினார். உணவு இடைவேளைக்குப்பின் நடைபெற்ற கலந்தாய்வில் உதகை அருட்சகோதரி முனைவர் ஸ்டெல்லா பல்தசார் மற்றும் ஸ்காட் கல்லூரியின் ஓய்வு பெற்ற முதல்வர் முனைவர் ஜேம்ஸ் டேனியல் ஆகியோர் பங்கேற்க சென்னை அருட்கடல் முனைவர் மரிய அருள்ராஜா சே.ச அவர்கள் தலைமையேற்று வழிநடத்தினார். பின்னர் பொதுநிலையினர் நடத்திய

பட்டிமன்றத்தையும் தந்தை அவர்கள் வழிநடத்தினார்கள். நிறைவில் மேதகு சிங்கராயர் அவர்கள் பொதுவெளியில் பணியாற்ற வேண்டிய இரு மைய கருத்துக்களையும், 5 செயல் திட்டங்களையும் வழங்கினார்கள்.

**மையக் கருத்துக்கள்**

1. பொதுவெளியில் பணியாற்ற வேண்டும் என்ற ஆர்வம்.
2. பொதுவெளியில் உள்ள சிந்தனை, பொதுப்பிரச்சனைகளில் தேவையான ஆர்வமும், கவனமும்.

**செயல் திட்டங்கள்**

1. நான் கிறிஸ்தவன் என்பதை உணர்தல்
2. வித்தியாசமாக சிந்தித்து பழகுதல்
3. சிந்தித்ததை வெளிப்படுத்துதல்
4. சிந்தனைகளை செயலில் காட்டுதல்
5. ஒன்றிணைந்து செயல் படுத்துதல்

பொதுவெளியில் நாம் இறங்குவது சமுதாயத்தை முன்னேற்றுவதற்கு என்றால், பொதுவெளி நம்மை கரங்கூப்பி வரவேற்கும் என்று கூறி கலந்தாய்வரங்கத்தை நிறைவு செய்தனர்.

அருட்தந்தை பெலிக்ஸ் சச

## புலரி திருமண தகவல் வலைதளம்

டிசம்பர் 16, 2016 அன்று, குருக்களுக்கான கிறிஸ்மஸ் கொண்டாட்டத்தின் வேளையில், புலரி திருமண தகவல் வலைதளம் தொடங்கப்பட்டது. நீண்ட நாட்களாக ஆலோசனையில் இருந்த இச்சேவையை, அருட்தந்தை அலெக்ஸ் புத்தேட்டு அவர்கள் பெரும் முயற்சி எடுத்து செயலுக்குக் கொண்டு வந்தார்.



Don Bosco Tech
Skilling India

# தொன் போஸ்கோ

## திறன் வளர் பயிற்சி நிறுவனம் – முஞ்சிறை

**செப்டம்பர் 26 முதல் ஜனவரி 8 வரை – அறிக்கை**

அறிமுகம்:

தொன் போஸ்கோ திறன் வளர் பயிற்சி நிறுவனமும் (DB. Tech) தக்கலை மறைமாவட்டமும் இணைந்து நடத்தும் இளையோர்களுக்கான திறன் வளர் பயிற்சியானது முஞ்சிறை புனித ஜார்ஜியார் ஆலய வளாகத்தில் 26.9.2016 அன்று தக்கலை மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் சச அவர்களால் ஆசீர்வதிக்கப்பட்டு தொடங்கப்பட்டது.

**தொன்போஸ்கோ திறன் வளர் பயிற்சி மைய செயல்பாடுகள்**

**ஊக்குவிப்பு பயிற்சிகள்:**

மாணவர்கள் கல்வியில் தேர்ச்சி அடைந்தால் மட்டும் போதாது அவர்கள் பிற திறன்களிலும் வளர்ச்சிடையும் நோக்கத்தில் அவர்களுக்கு ஊக்குவிப்பு (Motivational class) வகுப்புகள் திறமையும், அனுபவமும் வாய்ந்த சான்றோர்களால் விளையாட்டுக்கள், கருத்தமர்வுகள், விவாதங்கள் மற்றும் உரையாடல்கள் மூலம் கீழ்கண்ட நாட்களில் வழங்கப்பட்டது.

*13.10.2016 அன்று மறைமாவட்ட இளையோர் பணிக்குழு இயக்குநர் அருட்பணி பெலிக்ஸ் சச அவர்கள் தலைமைப்பண்பு, நேர நிர்வாகம் மற்றும் உறவு முறைகள் பற்றிய கருத்துகளை வழங்கினார்.

*14.10.2016 அன்று அருட்பணி. தங்கச்சன் சச அவர்களால் உறவுகளின் இன்றியமையாமை பற்றிய கருத்துக்கள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.

+ 25.10.2016 அன்று தடைகளைத் தாண்டி இலக்கை அடைதல் என்ற தலைப்பில் அருட்சகோ. ரோபின் ஜோஸ் அவர்கள் உலகின் சோதனைகளைக் கடந்து சாதனைகள் படைத்தவர்களின் வாழ்க்கை நிகழ்வுகளை சுட்டிக்காட்டி மாணவர்கள் தங்களது இலக்கை நோக்கி பயணிக்க ஊக்கமூட்டினார்.

**மாணவர்களின் மனித நேய செயல்பாடுகள்**

+ 09.10.2016 அன்று முஞ்சிறை புனித ஜார்ஜியார் ஆலய வளாகத்தில் நடைபெற்ற அன்பகம் முதியோர் விழாவில் மாணவர்கள் கலந்துகொண்டு "குடும்ப உறுப்பினர்கள் முதியோர் இல்லத்திற்கு செல்ல காரணம் மகனே! இல்லை மருமகளே!" என்ற தலைப்பில் பட்டிமன்றம் நடத்தினார்கள். அன்றைய தினம்

அன்பகம் முதியோர் இல்லத்திற்கு மாணவர்கள் சார்பாக இல்ல தலைமை சகோதரியிடம் பொருட்கள் வழங்கினார்கள்.

✝ 19.10.2016 அன்று அன்பகம் முதியோர் இல்லத்திற்கு DB. Tech மாணவர்கள் சார்பாக மதிய உணவாக அறுசுவை உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.

**பெற்றோர் கூட்டம்:**

✝ மைய பொறுப்பாளர் அருட்பணி. அஜீஷ் அட்டியில் வழிநடத்துதலில் 22.10.2016 அன்று கூட்டம் நடைபெற்றது. கீழ்கண்ட கருத்துக்களை பெற்றோர்கள் மற்றும் மாணவர்களிடம் பகிர்ந்து கொண்டார்.

✝ மாணவர்களுக்கு ஊக்குவிப்பு பயிற்சிகள் வழங்கப்படுகிறது.

✝ மாணவர்கள் தொடர்ந்து பயிற்சிமையத்திற்கு வருகை தரல் வேண்டும்.

✝ தகுதியும் திறமையும் வாய்ந்த பயிற்றுநர்களால் பயிற்றுவிக்கப் படுகிறது.

✝ மாணவர்களுக்கு வேலை பெற்றுத் தரப்படும்.

✝ மாணவர்கள் நிறுவனத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு நடக்க வேண்டும்.

✝ சக மாணவர்களுடன் அன்புடனும் நட்புறவுடனும் பழக வேண்டும்.

✝ பயிற்சி மையமானது காலை 09.30 மணி முதல் மாலை 04.00 மணிவரை செயல்படும்.

✝ காலை 09.30 மணிக்கு இறைவழிபாட்டுடன் வகுப்புகள் ஆரம்பமாகும்.

✝ மாணவர்களின் உள்ளார்ந்த கலைத்திறன்களை வெளிக்கொணர மாதத்திற்கு இரண்டு முறை சனிக்கிழமைகளில் கலை நிகழ்வுகள் நடத்தப்படுகின்றன.

**கள அனுபவப் பயிற்சி**

மாணவர்கள் கற்பதோடு நின்று விடாமல் தாங்கள் கற்றவற்றை களத்தில் நேரிடையாக அறிந்து கொள்ளும் வகையில் கணிணி மாணவர்களை 03.12.2016 அன்று தக்கலை புலரி அச்சகத்திற்கும், விநியோகப் பிரிவு மாணவர்களை மார்த்தாண்டம் பாபு கடைக்கும் அழைத்துச் சென்று நடைமுறை அறிவையும் கற்க வாய்ப்பு அளிக்கப்பட்டது.

**மாணவர்களின் இன்பச் சுற்றுலா**

மாணவர்கள் தங்கள் உறவுகளை வளர்த்துக்கொள்ளவும், வெளி அனுபவங்களை பெற்றுக்கொள்ளும் வகையில் கன்னியாகுமரிக்கு இன்பச் சுற்றுலா அழைத்துச் செல்லப் பட்டனர்.

**மாணவர்களை பணியமர்த்தும் பணிகள்**

பயிற்சிகளை நிறைவுசெய்யும் மாணவர்களை பணியமர்த்தும் நோக்கில் திருவனந்தபுரம், தூத்துக்குடி, நாகர்கோவில், தக்கலை, புதுக்கடை மற்றும்

மார்த்தாண்டம் ஆகிய இடங்களுக்கு நேரடியாகச் சென்றும், கோவை, சென்னை, பழனி போன்ற இடங்களுக்கு தொலைபேசி மூலமாக தொடர்பு கொண்டும் பணிகள் கேட்கப்பட்டன.

**பணிகள்**

இதுவரை மையத்தில் பயின்ற மாணவர்களுக்கு கீழ்கண்ட இடங்களில் பணி வாய்ப்பு பெறப்பட்டு சேர்ந்துள்ளார்கள்.

திருவனந்தபுரம்-யுரேகா போர்ப்ஸ்

புதுக்கடை-லாப்டி ஆப்டிக்கல்ஸ்

சுவாமியார்மடம்-டெலிகாலர்ஸ்

தக்கலை - புலரி அச்சகம்

சென்னை - ICICI வங்கி

மார்த்தாண்டம் - AXIS வங்கி

**மையப்பார்வை**

பயிற்சியில் சேர்ந்தோர் எண்ணிக்கை - 58 பேர்

முழுமையாக பயிற்சியை முடித்தவர்கள் - 38 பேர்

இதுவரை பணியில் சேர்ந்தோர் - 20 பேர்

அருட்தந்தை அஜீஷ் அட்டியில்,
மையத் தலைவர்.

அடுத்த வகுப்புகள் ஜனவரி 30 அன்று ஆரம்பமாகிறது.

தொடர்புக்கு. 04651-235277, 9443778014, 9786395536, 9487080596

---

**அருட்தந்தையர்கள் உருவாக்கம் குறித்து புதிய வழிமுறைகள்**

அருட்தந்தையர்களை உருவாக்குதல் குறித்து, புதிய வழிமுறைகளை உள்ளடக்கிய ஓர் ஏடு, டிசம்பர் 7 அன்று 'அருட்தந்தையர் அழைப்பு என்ற கொடை' ('The Gift of the Priestly Vocation') என்ற பெயரில் வெளியாகியுள்ளது. இவ் வழிமுறை ஏடு 1970 மற்றும் 1985 ஆகிய ஆண்டுகளில் வெளிவந்த மாற்றங்களை உள்ளடக்கி, இன்றையச் சூழலுக்கு ஏற்ற வழிமுறைகளை பரிந்துரைக்கிறது. ஒருவர் அருட்தந்தையாக வாழ்வதற்காக, முதலில், அவர் ஒரு முழு மனிதராக, மனிதருக்குரிய அனைத்து உணர்வுகளையும் ஒருங்கே பெற்றவராக இருக்க வேண்டும் என்பத இவ் ஏட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 'மனிதம்' 'ஆன்மீகம்' மற்றும் 'தேர்ந்து தெளிதல்' ஆகிய மூன்று கருத்துக்கள் அருட்தந்தையரின் வாழ்வில் அடிப்படை விழுமியங்களாக இருக்க வேண்டும் என்பது இவ்வேட்டில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஆதாரம் வத்திக்கான்வானொலி



# CATECHISM
# மறைக்கல்வி

"கடவுளது சாயலாக படைக்கப்பட்ட புதிய மனிதருக்குரிய இயல்பை அணிந்து கொள்ளுங்கள். அவ்வியல்பு உண்மையான நீதியிலும், தூய்மையிலும் வெளிப்படும்." எபே 4:24

அனைவருக்கும் இனிய கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்துகள்!

## ஆசிரியர் கருத்தரங்கு

2016 டிசம்பர் 10 சனிக்கிழமை 5,6,7,8 வகுப்பு ஆசிரியர்களுக்கான ஒருநாள் கருத்தரங்கு கல்லுவிளை ஆசீர் அரங்கில் இயக்குநர் அருட்தந்தை அலக்ஸ் புத்தேட்டு அவர்கள் தலைமையில் காலை 9.30 மணிக்கு தூய ஆவிப்பாடலுடன் ஆரம்பமானது. தொடர்ந்து அருட்தந்தை பிரின்டோ அவர்கள் 'திருச்சபையின் மறைப்போதனை', அருட்தந்தை ஜெஸ்டின் செறுவேலில் அவர்கள் 'திருச்சபையின் பார்வையில் எவ்வாறு மறைக்கல்வி பயிற்றுவித்தல்', அருட்தந்தை ஷாஜன் அவர்கள் 'திருப்பலி மற்றும் அடையாளங்கள் குறிக்கும் பொருள்கள்' என்பன பற்றியும் வகுப்புகளை நடத்தினார்கள். இயக்குநர் தந்தை அவர்கள் மறைக்கல்வியின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார்கள். இதில் 100க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். அனைவருக்கும் மதிய உணவும் தேநீரும் வழங்கப்பட்டது. நிறைவாக இயக்குநர் தந்தையின் நன்றி மற்றும் இறுதி செபத்துடன் மாலை 4.00 மணியளவில் இனிதே நிறைவடைந்தது.

## கிறிஸ்து பிறப்பு விழா கூடுகை

டிசம்பர் 17 சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நற்செய்தி நிலையத்தில் வைத்து குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் தலைமையில் சிறப்பு விருந்தினர் முன்னாள் இயக்குநர் அருட்தந்தை ஜெஸ்டின் செறுவேலில் மற்றும் இயக்குநர் தந்தை அவர்கள் முன்னிலையில் கிறிஸ்து பிறப்பு விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. குருகுல முதல்வர் அவர்கள் குழந்தை ஈசோவை நம் உள்ளங்களில் பிறக்கச் செய்ய வேண்டும் என்று பேருரையாற்றி கிறிஸ்துமஸ் கேக் வெட்டி கிறிஸ்து பிறப்பு மற்றும் புத்தாண்டு வாழ்த்துகளை தெரிவித்தார். சிறப்பு விருந்தினர் வானதூதரின் வாழ்த்து பற்றி வாழ்த்துரையாற்றினார். தொடர்ந்து மறைவட்ட கலைப்போட்டிகள் பற்றி ஆலோசிக்கப்பட்டது. போட்டிகளில் பங்கேற்கும் மாணவர்களின் பெயர் பட்டியல் மற்றும் போட்டிக்கு தேவையான

பொருட்கள் அனைத்தும் அந்தந்த மறைவட்ட செயலர்களிடத்தில் ஒப்படைக்கப்பட்டது. இயக்குநர் அவர்கள் கிறிஸ்துமஸ் பரிசாக அனைவரும் டயரி வழங்கினார். இக்கூடுகையில் மறைவட்ட செயலர்கள், ஊக்குவிப்பாளர்கள் மற்றும் தலைமையாசிரியர்கள் கலந்து கொண்டனர்.

**ஊக்குவிப்பாளர்கள் கூடுகை**

மறைக்கல்வி ஊக்குவிப்பாளர்கள் கூடுகை டிசம்பர் 17 சனிக்கிழமை மறைக்கல்வி தலைமையாசிரிகள் கூடுகைக்குப்பின் மாலை 5.00 மணியளவில் நடைபெற்றது. இக்கூடுகையில் மறைவட்ட போட்டிகள் பற்றி கலந்தாலோசிக்கப்பட்டது. அனைத்து மறைக்கல்வி ஊக்குவிப்பாளர்களும் கலந்து கொண்டனர்.

**தகவல்கள்**

1. 2016-17 விவிலியக் கலைவிழா மறைமாவட்ட போட்டிகள் ஜனவரி 14 சனிக்கிழமை படந்தாலுமூடு திருஇருதய மறைவட்ட ஆலய அரங்கில் நடைபெறும். மறைவட்ட போட்டிகளில் முதலிடம் மற்றும் இரண்டாமிடம், நாடகத்தில் மட்டும் முதலிடம் பிடித்த மாணவ மாணவியர்கள் கலந்து கொள்ள கேட்டுக்கொள்கிறேன்.

2. மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான போட்டிகள் மறைவட்ட அளவில் ஜனவரி 26 வியாழக்கிழமை படந்தாலுமூடு திருஇருதய மறைவட்ட ஆலய அரங்கில் முற்பகலில் மஞ்சாலுமூடு, நித்திரவிளை, படந்தாலுமூடு மறைவட்டங்களுக்கும், பிற்பகலில் ஆறுகாணி, சூசைபுரம், தக்கலை-பிலாங்காலை மறைவட்டங்களுக்கும், நண்பகல் 12.30 மணிக்கு மறைமாவட்ட அளவிலான விவிலிய வினாடி வினா போட்டியும் நடைபெறும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**விவிலியக் கலைவிழா மறைவட்ட போட்டிகள்**

2016-17 ஆம் ஆண்டு விவிலியக் கலைவிழா மறைவட்ட போட்டிகள் டிசம்பர் 26 திங்கட்கிழமை படந்தாலுமூடு, 27 செவ்வாய்கிழமை சூசைபுரம், 28 புதன்கிழமை மஞ்சாலுமூடு, 29 வியாழக்கிழமை ஆறுகாணி, 30 வெள்ளிக்கிழமை தக்கலை--பிலாங்காலை, 31 சனிக்கிழமை நித்திரவிளை மறைவட்டங்களுக்கும் நடத்தப்பட்டன. போட்டிகள் காலை 9.30 மணிக்கு தொடங்கி மாலை 5.00 மணி வரை 4 அரங்குகளில் நடைபெற்றன. நிறைவில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களும், பரிசுகளும் வழங்கப்பட்டன. இக்கலைவிழா போட்டிகள் சிறப்புற ஒத்துழைத்த மறைவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் அருட்தந்தையர்கள் ஜோசப் தன்ணிப்பாறை, எபின் பூவத்துமூட்டில், அஜீஷ் அட்டியில், ஷோஜோ இருபத்தஞ்சில்சிற, செபி மணிமலக்கண்டத்தில், ஆன்றணி ஜோஸ் மற்றும் மறைவட்ட செயலர்கள் அருட்சகோதரிகள் அனிதா, தீபா, மேரிஆன், அனு, ஆன் கிரேஸ், கிருபா ஆகியோர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

**இப்போட்டிகளில் மறைவட்ட வாரியாக முதல் மூன்று இடங்களை பிடித்த மறைக்கல்வி**

நிலையங்களின் பெயர்களும் பெற்ற புள்ளிகளும்..

ஆறுகாணி மறைவட்டம்

| | | |
|---|---|---|
| I | திருக்குடும்ப மறைக்கல்வி நிலையம் ஆறுகாணி | 131 |
| II | புனித தோமையார் மறைக்கல்வி நிலையம் | 90 |
| III | புனிததோமையார் மறைக்கல்வி நிலையம் பத்துகாணி | 66 |

மஞ்சாலுமூடு மறைவட்டம்

| | | |
|---|---|---|
| I | சிறுமலர் மறைக்கல்வி நிலையம் மஞ்சாலுமூடு | 102 |
| II | புனித திருச்சிலுவை மறைக்கல்வி நிலையம் மாலைக்கோடு | 69 |
| III | புனித மேரி மறைக்கல்வி நிலையம் களியல் | 63 |

நித்திரவிளை மறைவட்டம்

| | | |
|---|---|---|
| I | புனித அந்தோனியார் மறைக்கல்வி நிலையம் வயலின்கரை | 126 |
| II | ஜெயமாதா மறைக்கல்வி நிலையம் நித்திரவிளை | 104 |
| III | புனித சவேரியார் மறைக்கல்வி நிலையம் வாறுதட்டு | 73 |

படந்தாலுமூடு மறைவட்டம்

| | | |
|---|---|---|
| I | புனித தோமையார் மறைக்கல்வி நிலையம் பளுகல் | 126 |
| II | புனித மார்டின் டிபோரஸ் கழுவன்திட்டை | 70 |
| III | புனித மத்தேயு மறைக்கல்வி நிலையம் அண்ணிக்கரை | 69 |

தக்கலை–பிலாங்காலைமறைவட்டம்

| | | |
|---|---|---|
| I | புனித மிக்கேல் மறைக்கல்வி நிலையம் காட்டாத்துறை | 88 |
| I | புனித அல்போன்சாமறைக் கல்வி நிலையம் நாகர்கோவில் | 88 |
| II | சிறுமலர் மறைக்கல்வி நிலையம் பிலாங்காலை | 75 |
| III | புனித மேரி மறைக்கல்வி நிலையம் தக்கலை | 40 |

சூசைபுரம் மறைவட்டம்

| | | |
|---|---|---|
| I | கிறிஸ்து அரசர் மறைக்கல்வி நிலையம் பாலப்பள்ளம் | 106 |
| II | தேவமாதா மறைக்கல்வி நிலையம் கிள்ளியூர் | 96 |
| III | புனித சூசையப்பர் மறைக்கல்வி நிலையம் சூசைபுரம் | 82 |
| III | புனித வியாகப்பர் மறைக் கல்வி நிலையம் மாங்கரை | 82 |

அருட்தந்தை அலக்ஸ் புத்தேட்டு, இயக்குநர்

# HOLY CHILDHOOD
# குழந்தை ஈசோ





"வழியும் உண்மையும் வாழ்வும் நானே" யோவா(14:6)

'குழந்தைகள் விசுவாச வாழ்வில் வளர்ந்திட வேண்டும், விண்ணக வாழ்வை சொந்தமாக்கிட வேண்டும்' என்னும் நோக்கோடு இயக்குநர் தந்தை ஜோமோன் அவர்கள் தலைமையில் டிசம்பர் 3, 4 ஆகிய நாட்களில் படந்தாலுமூடு திருஇருதய ஆலயத்தில் குழந்தைகளுக்கான சிறப்பு தியானம் நடைபெற்றது. 1500க்கும் மேற்பட்ட குழந்தைகள் அணிசேர்ந்து, இறைபாதம் அமர்ந்து, தரணியில் நெறி தவறாமல் தூயவர் நாமம் பறைசாற்றி வாழவும் பயிற்சி பெற்றனர்.

**விவிலியப் பவனி**

இயக்குநர் தந்தை அவர்கள் விவிலியத்தை கையிலேந்தியும், தொடர்ந்து குழந்தைகள் பவனியாக வருகை தந்து விவிலிய வணக்கம் செலுத்தினர். தொடர்ந்து ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார். முதல் நாளன்று ஆயர் அவர்களும், நிறைவு நாளன்று குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்களும் திருப்பலி நிறைவேற்றினார்.

**இருபிரிவாக தியானம்**

இவ்வாண்டு அருட்சகோதரி சோனா CMC அவர்கள் தலைமையில் CMC அருட்சகோதரிகள் பாலர் பிரிவு முதல் 5ஆம் வகுப்பு வரை காமராஜ் நகர் பள்ளியில் வைத்து நடத்தினர். அருட்சகோ. ஜெசி அவர்கள் 'புனிதர்களின் வாழ்க்கை' அருட்சகோ. றீஜா 'பெற்றோருக்குக் கீழ்படிதல்' அவர்கள் என்ற சிந்தனைகளிலும் வகுப்புகள் வழங்கினர். 6ஆம் வகுப்பு முதல் 10 வரை அருட்தந்தை பிரின்டோ அவர்கள் படந்தாலுமூடு மறைவட்ட ஆலயத்திலும் வைத்து தியானம் வழங்கினர். திருத்தொண்டர் ஜாண் அவர்கள் 'ஆண்டவரை நம்பி வாழ வேண்டும்', அருட்தந்தை அலெக்ஸ் அவர்கள் 'ஈசோவின் பிறப்பு நம் இதயத்தில்', அருட்தந்தை பிரின்டோ அவர்கள் 'வாழ்க்கை என்பது என்ன?' என்ற சிந்தனைகளிலும் வகுப்புகள் வழங்கினர். இறைநாமம் சின்ன சின்ன கைகளின் ஓசையும், கால்களின் குதுகல நடனங்களாய்

செய்கைக் பாடல் வழியாக நடைபெற்றது.

**கைவைத்தல் செபம்**

'இறையடியார்களின் ஆசீர் இறைமக்கள் வாழ்வை வளமாக்கும்' என்ற வார்த்தைக்கேற்ப அருட்தந்தையர் குழந்தைகளின் தலைமேல் கைவைத்து செபித்து ஆசி வழங்கினர். இயக்குநர் தந்தை அவர்களின் இறுதி ஆசீருடன் தியானம் இனிதே நிறைவடைந்தது.

**நன்றி**

நற்செய்தி என்னும் நல்வார்த்தைகளை குழந்தைகள் இதயத்தில் விதைக்க உதவிய அனைவருக்கும் நன்றி.

அருட்தந்தை ஜோமோன்
இயக்குநர்.

## அருட்சகோதரர்களிடமிருந்து...

அருட்சகோதரர்கள் தங்கள் குருத்துவக் கல்லூரியில் கிறிஸ்து பிறப்பு விழா கொண்டாட்டங்களை நிறைவு செய்து விடுமுறைக்காக சொந்த வீடுகளுக்குத் திரும்பினார்கள். டிசம்பர் 20 அன்று மறைமாவட்டத்திற்கு வருகை தந்து 21 முதல் 25 வரை பல்வேறு பங்குகளுக்கு உதவி செய்ய அனுப்பப் பட்டனர். அதன்படி அருட்சகோ. ஜெபனேஷ் நித்திரவிளை ஜெயமாதா ஆலயத்திலும், அருட்சகோ. ரோபின் மஞ்சாலுமூடு சிறுமலர் ஆலயத்திலும், அருட்சகோ. மகேஷ் காரோடு தூய சூசையப்பர் ஆலயத்திலும், அருட்சகோ. ஆல்பின் பாலப்பள்ளம் கிறிஸ்து அரசர் ஆலயத்திலும், அருட்சகோ. ஜோஸ் சூசைபுரம் தூய சூசையப்பர் ஆலயத்திலும், அருட்சகோ. பிரின்ஸ் கிறிஸ்துராஜபுரம் கிறிஸ்து அரசர் ஆலயத்திலும், அருட்சகோ. லிஜோ பளுகல் தூய தோமையார் ஆலயத்திலும் உதவி புரிந்தனர். டிசம்பர் 23 அன்று ஆயர் அவர்களோடு கேக் வெட்டி கிறிஸ்து பிறப்பு விழாவைக் கொண்டாடினார்கள். பின்னர் ஆயர் அவர்கள் வாழ்த்துரையாற்றி அருட்சகோதரர்களை தனித்தனியாக சந்தித்து அறிவுரை கூறி உரையாடினார். தங்களுக்குக் கொடுக்கப்பட்ட பணித்தளங்களில் கிறிஸ்துமஸ் விழா கொண்டாடிய பின்னர் டிசம்பர் 25 அன்று சங்கமத்தில் ஒன்று கூடினர். டிசமபர் 26 முதல் 30 வரை நடைபெற்ற மறைவட்ட கலைப் போட்டிகளை சிறந்த முறையில் மதிப்பீடு செய்து அரும்பணியாற்றினர். இந்நிகழ்வுகளை ஒருங்கமைத்த அருட்தந்தை ஜெஸ்டின், அருட்தந்தை அலெக்ஸ், அருட்தந்தை ஜோண்சிலால், அருட்தந்தை ஜாண் தெக்கேல் ஆகியோர்களுக்கும் நன்றி. இப்புத்தாண்டு அனைவருக்கும் வளமாக அமைய வாழ்த்துகிறோம்.

அருட்சகோ. ஜெபனேஷ், அருட்சகோதரர் தலைவர்.

# சிறுமலர் மிஷன் லீக் இயக்கம்...

சிறுமலர்

MISSION LEAGUE



### பொறுப்பாளர் கூடுகை

சிறுமலர் மிஷன் லீக் இயக்க பொறுப்பாளர்கள் கூடுகை 18.12.2016 மதியம் 2.00 மணியளவில் கல்லுவிளை அலுவலகத்தில் ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திருமதி லதா அவர்கள் வரவேற்க, செயலர் அறிக்கை சமர்பித்தார். ஆயர் அவர்கள் தலைமையுரையாற்றி மிஷன் லீக் இயக்கம் மறைமாவட்டத்தின் அச்சாணி எனவும், மாணவர்களின் சிந்தனை கனவுகளை நனவாக்கி செயல்வடிவம் கொடுக்க அழைக்கப்பட்ட நாம், விசுவாச ஊற்றான நடைபயணம் போன்ற செயல்பாடுகள் வழியாக பிள்ளைகளின் விசுவாசத்தை வளர்த்த வேண்டும் என்றும் சிறுமலர் இதழ் வழியாக சிறந்த படைப்பாளிகளாக மாணவர்களை வெளிக்கொணர வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

### திருத்தொண்டு வாரம்

சீரோ மலபார் திருச்சபை தனகாக் திருநாளான ஜனவரி 6 அன்று முதல் தொடங்கி வரும் 7 நாட்களை திருத்தொண்டு வாரமாக சிறப்பிக்கின்றது. அதன்படி சிறுமலர் இயக்கம் முதல் 3 நாட்களை சிறப்பிக்கின்றது. இதற்கான செயல்திட்டமும், விழிப்புணர்வும் வழங்கப்பட்டது. குறிப்பாக இந்நாட்களில் பிற மறைமாவட்ட மக்களின் நிலை பற்றி தெரிந்து கொண்டு அவர்களோடு உறவை வளர்த்து கொள்ளல், பொருளாதார நிலையில் உதவுதல் போன்ற பழக்கங்களை மேற்கொள்வார்கள்.

### கிறிஸ்துமஸ் விழா

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் பெத்லேகமில் மாடடைகுடிலில் பிறந்த இறைமகன் ஈசோவை நம் உள்ளங்களில் பிறக்கவும், முகமலர்ச்சியுடன் நம் அன்பை பகிர்ந்து ஒரு பகிர்வின் விழாவாக இந்த கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு அமையட்டும் என்று ஆயர் அவர்கள் கிறிஸ்மஸ் கேக் வெட்டி வாழ்த்துரை வழங்கினார். நிகழ்வில் உறுப்பினர்கள் அனைவரும் கிறிஸ்து பிறப்பு வாழ்த்துப் பாடலை இசைத்தனர். தொடர்ந்து இயக்குநர் தந்தை ஜோஸ் அவர்கள் நன்றி கூற ஆயர் அவர்களின் இறுதி ஆசிருடன் நிறைவடைந்தது.

அருட்தந்தை ஷோஜோ,
இயக்குநர்.

# இல்வாழ்வு இயக்கம்



FAMILY APOSTOLATE
குடும்ப நல்வாழ்வு

## கிறிஸ்மஸ் கூடுகை

கல்லுவிளை மது அடிமைகள் மறுவாழ்வு மையத்தில் கிறிஸ்மஸ் கூடுகை நடைபெற்றது. இயக்குநர் ஜோசப் நெடும்புறம் அவர்கள் கிறிஸ்துமஸ் கேக் வெட்டி வாழ்த்துரை வழங்கினார். துணை இயக்குநர் அருட்தந்தை அஜீஷ் அட்டியில் அவர்கள் கிறிஸ்மஸ் செய்தி வழங்கினார். நிறைவில் அனைவருக்கும் வாழ்த்துப் பரிசுகள் வழங்கப்பட்டன.

## திருமண தயாரிப்பு பயிற்சி

2016 நவம்பர் மாதம் நடைபெற்ற பயிற்சியில் 22 பேர் பங்கேற்றனர். பங்கேற்ற அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. அடுத்த பயிற்சி 2017 ஜனவரி 20, 21, 22 ஆகிய நாட்களில் சங்கமத்தில் நடைபெறும். பயிற்சி கட்டணம் ரூ750/-

## மாதர் ஜோதிஸ்

மாதர் ஜோதிஸ் இயக்க மறைமாவட்ட போட்டிகள் 2017 ஜனவரி 7 அன்று கல்லுவிளை ஆசீர் அரங்கில் காலை 10 மணி முதல் நடைபெறும். மறைவட்ட போட்டியில் முதலிடம் பிடித்தவர்கள் கலந்து கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஜனவரி 8 ஞாயிறு மதியம் 2 மணிக்கு மாதர் ஜோதிஸ் இயக்க மறைமாவட்ட ஆண்டுவிழா கல்லுவிளை ஆசீர் அரங்கில் வைத்து நடைபெறும். மாதர் ஜோதிஸ் உறுப்பினர்கள் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பிக்க அழைக்கிறோம். சிறந்த அலகு, சிறந்த இயக்குநர், சிறந்த வழிகாட்டி, சிறந்த வீரப்பெண்மணி தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். திருமண உதவிகளும் வழங்கப்படுகிறது.

2017 ஆம் ஆண்டு செயல்திட்டம் அனைத்து வழிகாட்டிகளுக்கும் ஜனவரி மாதத்திற்குள் அனுப்பி தரப்படும். இயக்க செலவுகளுக்காக 100 குடும்பங்களுக்குட்ட பங்குகள் ரூ.500/-ம் அதற்கு மேற்பட்ட குடும்பங்கள் கொண்ட பங்குகள் ரூ.1000/-ம் ஆணிடு விழாவின் போது செலுத்தி ஒப்புகை சீட்டு பெற்றுக் கொள்ள நினைவூட்டுகிறேன்.

## வந்து பாருங்கள் செபக்குழு

வந்து பாருங்கள் செபக்குழுவின் சார்பில் பளுகல் பங்கில் நடைபெற்ற 114ம் ஒருநாள் தியானத்தை டிவைன் சகோதரர் வழிநடத்தினார். அடுத்த தியானம் ஜனவரி 14 சனிக்கிழமை நடைபெறும்.

### தசாம்சா கிளப்

தசாம்சா கிளப்பின் டிசம்பர் மாத கூடுகை டிசம்பர் 10 ஞாயற்றுக்கிழமை சகோதரர் சசி நெய்யாற்றின்கரை அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது. தசம பாகமாக கிடைக்கப்பட்ட தொகையிலிருந்து கல்வி உதவியாகவும், சீனாய் இதழ் வளர்ச்சிக்காவும், அன்னைத் தெரசா நோய் தணிப்பு அலகுகிற்கும் தலா ரூ5000/-வீதம் 15,000/- வழங்கப்பட்டது. அடுத்தக் கூடுகை ஜனவரி 15 அன்று டோம் நெட்டகுண்டு அவர்கள் இல்லத்தில் நடைபெறும்.

### தந்தையர் நல்வாழ்வு இயக்கம்

மாலைக்கோடு அலகு தந்தையர் நல்வாழ்வு இயக்கத்தினர் இடைக்கோட்டிலுள்ள சிறுமி ஒருவரின் கல்விச் செலவின் பொறுப்பை ஏற்று செய்து வருகிறார்கள். கிறிஸ்துமஸ் விழாவை முன்னிட்டு 8 ஏழைக் குடும்பங்களுக்கு கிறிஸ்துமஸ் பரிசு வழங்கினர்.

அருட்தந்தை ஜோசப் நெடும்புறம்,
இயக்குநர்.

## FEASTDAYS AND BIRTHDAYS OF REV. FRs

| JAN | BIRTHDAY |
|---|---|
| 07 | Fr. Chacko Basil CMI |
| 13 | Fr. Siju Puthenpurayil |
| 17 | Fr. Saji Elembasserril |
| 17 | Fr. Luka Kollamparampil |
| 18 | Fr. Toji Parampilparampil |
| 20 | Fr. Sanil Panthchirackal |
| 21 | Fr. Printo Kurias |
| 24 | Fr. Antony Chundelikkatt |
| 24 | Fr. Lijo Thekkel |
| 26 | Fr. Geo Choozhikunnel |
| 26 | Fr. Jomon Mangalamadom |

| JAN | FEAST DAY |
|---|---|
| 01 | Fr. Siju Puthenpurayil |
| 03 | Fr. Sanil Panthichirackal |
| 03 | Fr. Ritto Thoompunkal |
| 03 | Fr. Johnsilal Arackaparampil |
| 08 | Fr. John Thekkel |
| 20 | Fr. Davis Karukappally CMI |
| 20 | Fr. Justin Cheruvelil |
| 20 | Fr. Mijo Puthenpurayil |
| 20 | Fr. Robin Kurumullil |
| 20 | Fr. Sam Puthuparampil CMI |
| 20 | Fr. Sebi Manimalakandathil |

## களியல் வட்டார சபை

**கிறிஸ்துமஸ் கூடுகை**

18.12.2016 ஞாயிறன்று 3.30 மணிக்கு களியல் புனித மரியன்னை ஆலய வளாகத்தில் வட்டார சபைத் தலைவர் சகோதரர் ஜெஸ்டஸ் அவர்கள் தலைமையில் ஆரம்ப செபத்துடன் களியல் வட்டார சபை கிறிஸ்துமஸ் கூடுகை ஆரம்பமானது. சிறப்பு விருந்தினராக மத்திய சபைத் தலைவர் சகோ. ஐயாத்துரை அவர்கள் கலந்து கொண்டு மரியாளைப்போல தாழ்மை மனப்பான்மையுடையவர்களாக வின்செந்தியர்கள் வாழ வேண்டு மென்று விவிலியப் பகுதிகளை மேற்கோள் காட்டி வாழ்த்துரை வழங்கினார்கள். ஆன்மீக இயக்குநர் அருட்தந்தை டினு அவர்கள் தத்துக்குடும்பங்களின் வாழ்வாதாரங்களை புரிந்து கொண்டு உதவுவதோடு நின்று விடாமல் ஆன்மீகத்தில் ஈடுபட்டு அருளடையாளங்களிலும் பங்கேற்க வேண்டும் என்று ஆன்மீக உரையாற்றி கிறிஸ்துமஸ் கேக் வெட்டி அனைவருக்கும் பகிர்ந்து கிறிஸ்துமஸ், புத்தாண்டு வாழ்த்துகளை தெரிவித்தார்.

தொடர்ந்து வட்டாரசபை அறிவிப்புகளுடன் சகோ. ரமேஷ் அவர்கள் நன்றி நவில இறுதி செபத்துடன் மாலை 4.30 மணிக்கு இனிதே நிறைவடைந்தது.

## பிலாங்காலை வட்டார சபை

*காட்டாத்துறை புனித **மிக்கேல்** ஆலய வின்செந்தியர்கள் கிறிஸ்துபிறப்பை முன்னிட்டு, பங்குத்தந்தை மற்றும் பங்கு மக்களுடன் இணைந்து 23.11.2016 அன்று நித்திரவிளை கருணை இல்லம் சந்தித்து அவர்களோடு கலந்துரையாடி ரூ.5000/- மதிப்பிலான பொருட்களை வழங்கினர்.

*காட்டாத்துறை புனித **டோமினிக் சாவியோ** கிளைச் சபையின் சுழல்முறை தொழில் கடனுதவிகள் 17.12.2016 அன்று ஆன்மீக இயக்குநர் அருட்தந்தை செபி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இதில் 7 பயனாளிகளுக்கு ரூ.66,000/- வழங்கப்பட்டது.

*கடந்த சில மாதங்களாக செயல்படாமல் இருந்து வந்த பிலாங்காலை புனித **குழந்தை தெரசாள் ஆண்கள் கிளைச்சபையை** 04.12.2016 அன்று ஆன்மீக இயக்குநர் அருட்தந்தை லூக்கா கொல்லம்பறம்பில், தேசிய சபைத் துணைத்தலைவர் சகோ. சௌந்தரராஜ், மத்திய சபைத் தலைவர் சகோ. ஐயாத்துரை ஆகியோர்கள் பார்வையிட்டு ஆலோசனை

வழங்கி செயல்பட வைத்தனர். தற்போது நன்முறையில் செயல்பட்டு வருகிறது. கிறிஸ்து பிறப்பு விழாவை முன்னிட்டு புனித குழந்தை தெரசாள் கிளைச்சபையினர் 5 தத்துக் குடும்பங்களை சந்தித்து ரூ.1000/- வீதம் வழங்கியதோடு கிறிஸ்துமஸ் கேக்கும் வழங்கினர்.

**•பிலாங்காலை புனித மேரி இளைஞர் பெண்கள் கிளைச்சபையினரும்** 5 தத்துக் குடும்பங்களை அவரவர் இல்லங்களில் சந்தித்து ரூ.5000/- வழங்கினர். மேலும் 25.12.2016 அன்று பெருஞ்சிலம்பு மனவளர்ச்சி குன்றியோர் இல்லம் சந்தித்து ரூ.5000/- வழங்கினர். இந்நிகழ்வில் புனித குழந்தை தெரசாள் பெண்கள் கிளைச்சபையினரும் கலந்து கொண்டனர்.

## நித்திரவிளை வட்டார சபை

### கிறிஸ்துமஸ் கூடுகை

18.12.2016 அன்று மாலை 4 மணியளவில் ஆன்மீக இயக்குநர் பேரருட்தந்தை கிறிஸ்துதாஸ், வட்டார சபைத் தலைவர் சகோதரர் ஜோஸ் அவர்கள் தலைமையில் ஆரம்ப செபத்துடன் கிறிஸ்துமஸ் கூடுகை நடைபெற்றது. ஆன்மீக இயக்குநர் அவர்கள் கேக் வெட்டி, வாழ்த்துரையாற்றினார். முன்னாள் வட்டார சபைத் தலைவர் சகோ. வின்சென்ட் ராஜ் அவர்களும் வாழ்த்துரை வழங்கினார். தொடர்ந்து தேநீர் விருந்தும் பரிமாற இறுதி செபத்துடன் இனிதே நிறைவுற்றது.

**முஞ்சிறை புனித டோமினிக் சாவியோ, புனித ஜார்ஜியார்** கிளைச்சபையினர் அனைவரும் சேர்ந்து 24.12.2016 அன்று தத்துக் குடும்பங்களை சந்தித்து பொருளுதவிகளும், இனிப்பும் வழங்கினார்கள். இதைப்போன்று நித்திரவிளை ஜெயமாதா மற்றும் லிட்டில் பிளவர் கிளைச்சபையினரும் தத்துக்குடும்பங்கள் சந்தித்து உதவி வழங்கினர்.

## சூசைபுரம் வட்டார சபை

### கிறிஸ்துமஸ் கூடுகை

சூசைபுரம் வட்டார சபையின் கிறிஸ்து பிறப்பு கொண்டாட்டம் மற்றும் மாதாந்திர கூடுகை 18.12.2016 அன்று மாலை 3 மணியளவில் ஆன்மீக இயக்குநர் பேரருட்தந்தை ஆன்றணி ஜோஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக மத்திய சபை திட்ட அலுவலர் சகோ. ஷிபு மோன் கலந்து கொண்டு வாழ்த்துரையாற்றினர். இந்நிகழ்வில் சூசைபுரம் வட்டார கிளைச்சபை பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர். கேக் வெட்டி ஒருவொருக்கொருவர் கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு வாழ்த்துகளை பகிர்ந்தனர்.

### நற்கருணை ஆராதனை

வின்செந்தியர்கள் செயல்பாடு கள் மேன்மேலும் எழுச்சி பெற வேண்டும் என்ற நோக்குடன் 13.12.2016 மதியம் 2.00 மணியளவில் ஆன்மீக இயக்குநர் பேரருட்தந்தை ஆன்றணி ஜோஸ் அவர்கள்

தலைமையில் நற்கருணை ஆராதனை நடைபெற்றது. அரிய பல விவிலிய கருத்துக்களோடு தியான உரையும், நடைபெற்றது. இந்நிகழ்வில் சூசைபுரம் வட்டார சபை வின்செந்தியர்கள் கலந்து கொண்டனர்.

### அன்பகம் சந்திப்பு

**கிள்ளியூர் புனித அன்னைத் தெரசா பெண்கள் கிளைச்சபையின்** சார்பில் ஆன்மீக இயக்குநர் அருட்தந்தை ஜோஸ் வயலில் மற்றும் அருட்சகோதரி சிபியா SABS அவர்கள் வழிகாட்டுதலில் பங்குமக்களோடு முஞ்சிறை அன்பக முதியோர்களை சந்தித்து, உரையாடி, கிறிஸ்து பிறப்பு வாழ்த்துகள் கூறி ரூ.3000/- உதவியாக வழங்கினர். இவ் வனுபவம் சிறப்பாகவும், குறிப்பாக அன்பக பொறுப்பாளர்களின் தேநீர் விருந்தும், உபசரிப்பும் வின்செந்திய பணியை உற்சாகப் படுத்துவதாகவும் தெரிவித்தனர்.

**கிள்ளியூர் புனித அன்னைத் தெரசா பெண்கள் கிளைச்சபையின்** சார்பில் திட்டம் வழங்குதல் நிகழ்வு 26.11.2016 அன்று ஆன்மீக இயக்குநர் அருட்தந்தை ஜோஸ், வட்டார சபைத் தலைவர் சகோ. சோனிக் ரீகன், துணைத்தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

சில காலம் செயல்படாமலிருந்த **கிள்ளியூர் ஆண்கள் கிளைச் சபையை** தேசிய சபை துணைத் தலைவர் சகோ. சௌந்தரராஜ், மத்தியசபை செயலர் சகோ. எட்வின்சன், திட்ட அலுவலர் சகோ. ஷிபு மோன், வட்டாரசபைத் தலைவர் சகோ. சோனிக் ஆகியோர்கள் சந்தித்து, குறைகளை ஆராய்ந்து நிவர்த்தி செய்ததன் காரணமாக 18.12.2016 அன்று முதல் மறுமலர்ச்சியோடு செயல்பட்டு வருகிறது.

பாலப்பள்ளம் வின்சென்ட் தே பவுல் ஆண்கள் கிளைச்சபையினர் இரு புற்றுநோயாளிகளை சந்தித்து ஆறுதல் கூறி அவர்களுக்கு மருத்துவ உதவியாக ரூ.4,000/- வழங்கினார்கள். மேலும் ரூ.10,000/- ஒசூர் செவிலியர் கல்லூரியில் பயிலும் மாணவி ஒருவருக்கு வழங்கி, கல்வி தொடர வழிவகை செய்தனர்.

## <u>படந்தாலுமூடு வட்டார சபை</u>

### கிறிஸ்துமஸ் கூடுகை

படந்தாலுமூடு வட்டார சபையின் கிறிஸ்து பிறப்பு கொண்டாட்டம் மற்றும் மாதாந்திர கூடுகை 18.12.2016 அன்று மாலை 3 மணியளவில் ஆன்மீக இயக்குநர் பேரருட்தந்தை ரோபின்ஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சிறப்பு விருந்தினராக தேசிய சபை துணைத்தலைவர் சகோ. சௌந்தர ராஜ் அவர்கள் கலந்து கொண்டு வாழ்த்துரையாற்றினர். ஆன்மீக இயக்குநர் அவர் கேக் வெட்டி அனைவருக்கும் கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டார்.

சகோ. ஷாஜன்

செய்தித்தொடர்பாளர்.

# மறைமாவட்டச் செய்திகளும் நிகழ்வுகளும்

## இறைவார்த்தைக் கொண்டாட்டம்

பதினாறாவது மறைமாவட்ட இறைவார்த்தைக் கொண்டாட்ட மானது 2016, டிசம்பர் 2-4, வரை படந்தாலுமூடு திரு இருதய ஆலய வளாகத்தில் வைத்து நடை பெற்றது. குழந்தைகளுக்கான தனி தியானமும், வயது முதிர்ந்தவர்க ளுக்கான தியானமும் உள்ளடக் கியதாக இது அமைந்தது. முதிர்ந்த வர்களுக்கான தியானம், மதுரையைச் சேர்ந்த ஆன்டணி ராஜ் மற்றும் முரிங்நூர் தியான இல்லத்தைச் சேர்ந்த சகோ. குரியன் ஆகியோரால் வழிநடத்தப்பட்டது. குழந்தைகளுக்கான தியானம், அருட்தந்தை ஜோமோன் அவர்கள் தலைமையில் நடத்தப்பட்டது. தியானத்தின் இறுதி நாளன்று, குருத்துவ அருட்பொழிவின் வெள்ளி விழா சிறப்பிக்கும் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் கவுரவிக்கப்பட்டார்.

## நித்திரவிளை கருணை இல்லம்: வெள்ளிவிழா தொடக்கம்

1992 ஆம் ஆண்டு உடலளவில் மாற்றுத்திறனாளிகளாக உள்ள குழந்தைகளுக்காக தொடங்கப் பட்ட கருணை இல்லம், தனது 25 ஆண்டு கால சேவையை நிறைவு செய்யும் தருவாயை அடைந்திருக்கிறது. கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் அங்கமான இந்நிறுவனம் தற்போது, மனநிலை வளர்ச்சி குன்றிய மாணவர்களுக்கு கல்வி அளிக்கிறது.

இதன் வெள்ளிவிழா கொண்டாட்டங்களின் தொடக்க நிகழ்வானது, டிசம்பர் 10, 2016 அன்று நித்திரவிளை பங்கின் அமலா அரங்கத்தில் வைத்து நடை பெற்றது. ஆயர் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் தலைமை யேற்ற இந்நிகழ்வில், மாற்றுத் திறனாளிகள் பணி அலுவலர் திரு. D.பிரம்மநாயகம், KKSSS செயலர் அருட்தந்தை சஜி இளம்பாசேரில், Dr. ஜஸ்டின் பால், முன்னாள் பஞ்சாயத்துத் தலைவி மேரி பாய் ஆகியோர் பங்கேற்றனர். ஆயர், அவர்கள் ASMI அருட்சகோதரிகள் ஆற்றும் அரிய பணியை வெகுவாகப் பாராட்டியதோடு, இயக்குநர் பேரருட்தந்தை கிறிஸ்துதாஸ் அவர்களுக்கும் நன்றி கூறினார்.

## CRI - துறவியர் கூட்டம்

CRI இயக்கத்தின், தக்கலை பொறுப்பாளர்களின் கூட்டம் டிசம்பர் 10, 2016 அன்று தக்கலை சங்கமத்தில் ஆயர் மற்றும் தலைமை ஆலோசனைக் குழு உறுப்பினர்களின் உடனிருப்பில் நடைபெற்றது. சீரோ மலபார் ஆர்க்கி எப்பிஸ்கோப்பல் அசம்பிளி பரிந்துரைத்த, எளிய வாழ்வு, குடும்பங்களின் சாட்சிய வாழ்வு மற்றும் புலம்பெயர்ந்தோருக்கான மேய்ப்புப்பணி ஆகியவற்றைக் குறித்து விவாதித்து அவற்றை நடைமுறைப் படுத்துவதற்கான

ஆலோசனைகளையும் முன்வைத்தன.

**UGC – ஐக்கிய கிறிஸ்தவ பேரவை கூட்டம்**

ஐக்கிய கிறிஸ்தவ இயக்கத்தின் ஆண்டு கூட்டமும் கிறிஸ்மஸ் விழாவும், டிசம்பர் 22, 2016 அன்று தக்கலை சங்கமத்தில் வைத்து, குமரி மாவட்டத்தைச் சேர்ந்த பல்வேறு சபைகளைச் சேர்ந்த ஆயர்களின் பங்கேற்புடன் நடைபெற்றது. கூட்டத்தினரை தக்கலை மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் வரவேற்றார். தொடர்ந்து சபைத்தலைவர்கள் கிறிஸ்மஸ் செய்தியை பகிர்ந்து கொண்டார்கள்.

**பளுகல்: புத்தாலயம் அடிக்கல் நாட்டுதல்**

பளுகல் பங்கில், புதிய ஆலயம் கட்டுவதற்கான அடிக்கல் மந்திரிப்பு, டிசம்பர் 16, 2017 அன்று தக்கலை ஆயர் மார் ஜார்ஜ் ராஜேந்திரன் அவர்களால் நடத்தப்பட்டது. அருட்தந்தை சக்கரியாஸ் காயித்தறா அவர்களால் 55 ஆண்டுகளுக்கு முன்னர் எழுப்பபட்ட ஆலயம் ஆனது அகற்றப்படும். பங்குதந்தை, ஜேக்கப் ஐயம்மாத்தற அவர்கள் பங்குமக்களை ஒருங்கிணைத்து ஆலயக் கட்டுமானப் பணிகளை முன்னெடுக்கிறார்.

**மிஷன் ஞாயிறு காணிக்கையும் பரிசுகளும்**

கீழ்வரும் பங்குகளும், திருத் தொண்டுத் தளங்களும் மிஷன் ஞாயிறு காணிக்கையில் முதல் இடங்களைப் பெற்றன.

01-25 குடும்பங்கள்:

புனித ஜார்ஜ் மிஷன், மேக்கரை: Rs. 7000

26-50 குடும்பங்கள்:

புனித ஜோசப் மிஷன், குந்நுவிளை : Rs.5873

51-100 குடும்பங்கள்:

புனித மத்தேயு ஆலயம், அன்னிக்கரை : Rs.5250

100 குடும்பங்களுக்கு மேல்:

சிறுமலர் மறைவட்ட ஆலயம், மஞ்சாலுமூடு : Rs. 32000

மிகவும் அதிகமாக பங்களித்தோர்:

புனித அல்போன்சா திருத்தலம் நாகர்கோவில் : Rs.50465

# மறைவட்ட செய்திகள்

## மஞ்சாலுமூடு மறைவட்டம்

### விழிப்புணர்வு கருத்தரங்கு

பென்கிரி புனித பெனடிக்ட் ஆலயத்தில் 10.11.2016 அன்று கல்லுவிளை சமூக சேவை சங்கம் சார்பில் தீமைக்கு எதிரான விழிப்புணர்வு கருத்தரங்கு நடைபெற்றது.

மார்த்தாண்டம் ஆரோக்கியா இயற்கை மருத்துவமனையின் இலவச மருத்துவமுகாம் 27.11.2016 அன்று நடைபெற்றது. அருட்தந்தை ஷோஜி அவர்கள் மருத்து முகாமை தொடங்கி வைத்தார். இதில் பென்கிரி ஆலய மக்களோடு, ஊர்மக்கள் பலரும் பரிசோதனை செய்து சிகிட்சை பெற்றனர்.

### திருக்குடும்ப ஆலயம் முக்கூட்டுக்கல்

முக்கூட்டுக்கல் பங்கின் சுலோஜனா என்ற ஏழைப்பெண் தொண்டையில் ஏற்பட்ட நோயின் காரணமாக உணவு உண்ணவோ, தண்ணீர் குடிக்கவுவோ இயலாமல் மிகுந்த சிரமப்பட, மருத்துவரை அணுக மருத்துவர் உடனடியாக 20.11.2016 அன்று அறுவை சிகிட்சை செய்ய வேண்டுமென கூறினார். கணவரை இழந்து தன் இரு குழந்தைகளுடன் வசிக்கும் இவருக்கு பொருளாதார வசதி இல்லை. இதையறிந்த பங்குமக்கள் உடனடியாக 9 குழுக்களாக பிரிந்து சென்று 5 மணிநேரத்தில் ரூ.25,000/- திரட்டி அப்பெண்மணியின் அறுவை சிகிட்சைக்கு உதவினர். தற்போது அறுவை சிகிட்சை முடிந்து வீட்டில் ஓய்வு எடுத்து வருகிறார். இதற்காக ஒத்துழைத்த முக்கூட்டுக்கல் இறைமக்களுக்கு நன்றி.

### திருக்குடும்ப விழா

28.12.2016 அன்று திருக்குடும்ப விழா திருப்பலியுடன் கொண்டாடப்பட்டது. பின்னர்அனைத்து உறவியங்களின் கலைப் போட்டிகளும், கலை நிகழ்சிகளும் நடைபெற்றது.

தகவல் சேகரிப்பு
திருமதி.செலின் மேரி

## நித்திரவிளை மறைவட்டம்

### புனித ஜார்ஜியார் திருத்தலம்

23.12.2016 அன்று மறைக் கல்வி சார்பில் சிறப்புத் திருப்பலியும், முதியோர் இல்லத் தில் கிறிஸ்துமஸ் விழாவும் நடைபெற்றது. மறைமாவட்ட மிஷன் லீக் இயக்குநர் அவர்கள் தலைமை தாங்கி வாழ்த்துரை வழங்கினார். பல்வேறு கலை நிகழ்சிகளும், போட்டிகளும், கிறிஸ்துமஸ் தாத்தா நடனங்களும் நடைபெற்றன. நிறைவில் பரிசுகள் வழங்கப்பட்டு அருட்தந்தை அஜிஷ் அவர்களின் நன்றியுடன் விழா நிறைவடைந்தது. அனைவருக்கும் இரவு சிற்றுண்டி வழங்கப்பட்டது. 24.12.2016 அன்று திருத்தலத்தில்

இரவு 10.30 மணிக்கு உறவி யங்களின் கிறிஸ்துமஸ் வாழ்த்து பாடல் போட்டியும், தொடர்ந்து திருப்பலியும் நடைபெற்றது.

**புனித சவேரியார் குடும்பவிழா**

வாறுதட்டு புனித சவேரியார் ஆலய பாதுகாவலர்விழா டிசம்பர் 7 அன்று திருக்கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 12 அன்று நிறைவடைந்தது. டிசம்பர் 10 அன்று பாதுகாவலர் திருப்பவனியும், இரவு 10 மணிக்கு புலரி கலைக்குழுவினரின் 'இரக்கத்தில் மிஞ்சி நிற்போர் முதியோர்களா? இளைஞர்களா?' என்ற பட்டி மன்றமும் நடைபெற்றது.

தகவல் சேகரிப்பு
திருமதி.ஸ்னேக லதா

## சூசைபுரம் மறைவட்டம்

**கிறிஸ்தவ ஐக்கியப் பேரவை**

கருங்கல் வட்டார கிறிஸ் தவர்களின் ஒற்றுமையை வலியு றுத்தும் வகையில் கடந்த ஆண்டைப் போன்று இவ்வாண்டும் கத்தோலிக்க திருச்சபை, தென் னிந்திய திருச்சபை, பெந்த கொஸ்தே திருச்சபை மக்கள் அனைவரும் இணைந்து வெள் ளியாவிளை நல்லாயன் ஆல யத்திலிருந்து தொடங்கி கருமா விளை தென்னிந்திய திருச்சபை வரை ஐக்கியப் பேரணி நடத்தினார்கள். பேரணி நிறைவில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் நமது ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் கலந்து கொண்டு ஒற்றுமையைப் பற்றி விவிலிய மேற்கோள்களோடு பேருரையாற்றினார். வின்சென்ட் தே பவுல் தேசிய சபையின் துணைத்தலைவர் சகோ. சௌந்தரராஜ் அவர்களும் கலந்து கொண்டார்கள். விழா ஏற்பாடுகளை பேரருட்தந்தை ஆன்றணி ஜோஸ் அவர்கள் தலைமையேற்று நடத்தினார்.

**சூசைபுரம் புனித சூசையப்பர் மறைவட்ட ஆலயத்தில்** கிறிஸ்துமஸ் குழுப்பாடல் போட்டி நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டது.

**கிள்ளியூர் புனித தேவ மாதா மற்றும் மாதாபுரம் புனித தோமையார்** ஆலயங்களில் கிறிஸ்மஸ் மரவிழா பங்குத்தந்தை அவர்கள் தலைமையில் நடை பெற்றது.

**மாங்கரை புனித வியாகப்பர் ஆலயத்தில்** பங்குமக்கள் நான்கு குழுக்களாக பிரிந்து 'கிறிஸ்துமஸ் கிராமம்' என்ற நிகழ்வை நடத் தினர். மறைக்கல்வி மாணவர் களும் ஆசிரியர்களும் கிறிஸ் துமஸ் நண்பர் பரிசுகளை பரிமாறிக்கொண்டனர்.

**பாலப்பள்ளம் கிறிஸ்து அரசர் ஆலய** இளைஞர் இயக்கத்தின் சார்பில் பழைய ஏற்பாடு நிகழ்வுகள் தொடங்கி இயேசுவின் பிறப்பு வரையிலான நிகழ்வுகளை சித்தரிக்கும் பல சிறுசிறு குடில்கள் அமைக்கப்பட்டது. அருட்தந்தை பிரின்டோ அவர்கள் தலைமையில்

1 மணி நேரம் நற்கருணை ஆராதனை நடைபெற்றது. கிறிஸ் துமஸ் குலுக்கலும் நடைபெற்றது.

தகவல் சேகரிப்பு

திருமதி.ஹேமா

## செங்கோட்டைச் செய்திகள்

டிசம்பர் 1-5ம் தேதி வரை புலரி மெட்ரிக் பள்ளியில் 4 முதல்10 வரை பயிலும் மாணவர்களுக்கான தேர்வு ஆயத்த முகாமை அருட்தந்தை பீட்டர் கிழக்கேல் அவர்கள் தொடங்கி வைத்தார். இம்முகாமில் ஒன்றிணைந்து செபிப்பது, உண்பது, இன்ப துன்பங்களை பகிர்ந்து கொள்வது பற்றிய பயிற்சிகள் வழங்கப்பட்டது.

டிசம்பர் 2-4 வரை படந்தா லுமூட்டில் நடைபெற்ற நற்செய்திப் பெருவிழாவில் செங்கோட்டை வட்டார மக்கள் கலந்து கொண்டனர். ஞாயிறு காணிக்கை வசூலில் 25 குடும்பங்களுக்குட்பட்ட பிரிவிற்கான பரிசை மேக்கரை புனித ஜார்ஜியார் ஆலயம் பெற்றது.

டிசம்பர் 17 எக்யுமினிக்கல் கிறிஸ்து பிறப்பு பாடல் போட்டிகள் MCBS அருட்தந்தையர்களால் நடத்தப்பட்டது.

டிசம்பர் 18 அருட்தந்தை தோமஸ் தெக்கேல் அவர்களின் நினைவுத் திருப்பலி வாஞ் சிநகர் புனித மேரி ஆலயத்தில் நடைபெற்றது. மாதர் ஜோதிஸ் இயக்கத்தின் சார்பில் ஸ்டார் மேட்சிங் போட்டியும் நடத்தப்பட்டது.

டிசம்பர் 19 புளியரை விஸ்யூ பவனில் செங்கோட்டை மிஷன் கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் நடைபெற்றது. நற்கருணை மற்றும் ஒப்புரவு அருளடையாளமும் நடைபெற்றது. ஆயர் அவர்கள் கிறிஸ்து பிறப்பு வாழ்த்துச் செய்தி வழங்கி கேக் வெட்டினார். கிறிஸ்மஸ் தோழர் பரிசுகள் பரிமாறப்பட்டு, தோழமையின் விருந்தும் நடைபெற்றது. MCBS அருட்தந்தையர்கள் விழாவை ஒருங்கிணைத்தார்கள்.

டிசம்பர் 25 அனைத்துப் பங்குகளிலும் கிறிஸ்து பிறப்பு வாழ்த்து பாடல் ஆர்வத்துடன் நடைபெற்றது, பங்கு மக்கள் மட்டுமல்லாமல் பிற சமய மக்களும் கலந்து கொண்டனர். புளியரை பங்கில் திருப்பலிக்குப் பின் கலைநிகழ்சிகளும் நடத்தப்பட்டன.

தகவல் சேகரிப்பு,

அருட்சகோதரி எமிலி CMC



இரக்கம் பெரும் மகிழ்ச்சியை நோக்கி நம்மை இட்டுச் செல்கிறது. காரணம், புதுவாழ்வின் நம்பிக்கையின் விசாலமான வெளியை நோக்கி அது நம்முடைய இதயங்களைத் திறக்கிறது.

# உலக திருச்சபைச் செய்திகள்

## கைதிகளால் எழுதப்பட்ட நூல், திருத்தந்தைக்கு வழங்கப்பட்டது

'மன்னிப்படைய தாகம்' (Sete di Perdono) என்ற தலைப்பில், சிறைக்கைதிகள் தங்கள் அனுபவங்களை தொகுத்துள்ள நூலை, வின்செண்ட் தே பவுல் சபையினர், நவம்பர் 28, அன்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுக்கு பரிசாக அளித்தனர். சிறைக்கைதிகள் தனக்கு இந்நூலை வழங்கியது, தன் உள்ளத்தை அதிகம் தொட்டதென்று திருத்தந்தை கூறினார். வின்செண்ட் தே பவுல் சபையவும் இத்தாலிய நீதித்துறையும் இணைந்து, கைதிகள் நடுவே ஏற்பாடு செய்த ஒரு போட்டியில், கைதிகள் தங்கள் அனுபவங்களை, குறிப்பாக, மன்னிப்பின் வழியே தாங்கள் அடைந்த அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர். அதன் தொகுப்பே 'மன்னிப்படைய தாகம்' என்னும் நூலின் உள்ளடக்கம்.

## அருட்தந்தை டாம் நிலை குறித்து வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் விளக்கம்

ஏமனில் தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட டாம் உழுந்நாலில் அவர்களின் காணொளியானது, டிசம்பர் 26, 2016 அன்று வெளியானது. அதில் அவர் தம்மை விடுவிப்பதற்காக போதுமான முயற்சிகளை, இந்திய அரசும் திருச்சபையும் மேற்கொள்ளவில்லை என ஆதங்கம் வெளியிட்டிருந்தார். இதற்கு பதில் கூறிய இந்தியாவின் வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் அவர்கள், "அருட்தந்தை டாம் உழுந்நாலில் அவர்களின் கொணொளிப் பதிவைக் கண்டேன்; அவரது விடுதலைக்குத் தீவீர முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம்" என தமது டிவிட்டர் பக்கத்தில் செய்தி வெளியிட்டார். இதற்கிடையே வெளியுறவுத் துறை சார்பில் செய்தியாளர்களிடம் பேசிய விகஸ் சவரூப் அவர்கள், ஏமன் நாட்டில் நிலையான ஆட்சி இல்லாததால், அருட்தந்தையை விடுவிப்பதற்கான முயற்சிகள் அண்டை நாடுகளின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றார்.

## சிரிய அரசுத் தலைவர் ஆசாத்துக்கு திருந்தந்தை அனுப்பிய மடலுக்கு வரவேற்பு

சிரிய நாட்டில் அமைதி நிலவ வேண்டும் என்ற ஆழ்ந்த தாகத்தோடு, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அந்நாட்டு அரசுத் தலைவர் பாஷர் அல் ஆசாத் அவர்களுக்கு, கர்தினால் மாரியோ செனரி அவர்கள் வழியாக அனுப்பியுள்ள மடலை கிறிஸ்தவர்களும் இஸ்லாமியர்களும் வரவேற்றுள்ளனர் என, ஆசிய செய்தி கூறுகிறது.

## Mission Sunday Collections- 2016

| Sl.No | Place | Church Name | Amount |
|---|---|---|---|
| 1 | Anjugramam | St. Thomas | 1,650 |
| 2 | Anamughom | Loretto Matha | 1,500 |
| 3 | Anayadi | St. George | 2,600 |
| 4 | Annikkarai | St. Mathew's | 5,250 |
| 5 | Arukani | Holy Family | 4,940 |
| 6 | Athencode | St. Maria Goretti | 3,231 |
| 7 | Bengri | St. Benadict's | 5,250 |
| 8 | Cheenivilai | Amala Maria | 2,500 |
| 9 | Chenamcode | Lourdu Matha Mission | 1,600 |
| 10 | Chiristurajapuram | Christ the King | 3,000 |
| 11 | Kaisalavilai | St. Xavier's | 5,200 |
| 12 | Kaliyal | St. Mary's | 8,000 |
| 13 | Karode | St. Joseph's | 2,000 |
| 14 | Kattathurai | St. Michael's | 2,980 |
| 15 | Kalluvilai | Bld. Mother Theresa | 1,500 |
| 16 | Kazhuvanthittai | St. Martin de Porres | 1,750 |
| 17 | Killiyoor | Deva Matha | 2,000 |
| 18 | Kulasekaram | St. Joseph's | 1,470 |
| 19 | Malaicode | Holy Cross | 18,100 |
| 20 | Manjalumoodu | Little Flower | 32,000 |
| 21 | Mankarai | St. James | 2,000 |
| 22 | Marappady | St. Thomas | 5,000 |
| 23 | Marthandam | St. Vincent de Paul | 3,000 |
| 24 | Maharajapuram | St. Michael's | 500 |
| 25 | Mathapuram | St. Thomas | 500 |
| 26 | Mezhacode | St. Francies Assisi | 3,310 |
| 27 | Mekkarai | St. George Mission | 7,000 |
| 28 | Muzhucode | St. Thomas | 10,215 |
| 29 | Mukkoottukal | Holy Family | 15,000 |
| 30 | Munchirai | St. George | 3,500 |
| 31 | Nagercoil | St. Alphonsa | 50,465 |

| | | | |
|---|---|---|---|
| 32 | Netta | St. Thomas | 6,000 |
| 33 | Nithravilai | Jeyamatha | 7,000 |
| 34 | Padanthalumoodu | Sacred Heart | 11,000 |
| 35 | Palappallam | Christ the King | 3,000 |
| 36 | Pallikonam | Sacred Heart | 3,080 |
| 37 | Palugal | St. Thomas | 21,275 |
| 38 | Paraicode | Christ the King | 2,310 |
| 39 | Pathukani | St. Thomas | 2,700 |
| 40 | Penu | St. Mary's | 2,000 |
| 41 | Perunchilampu | St. Thomas Mission | 2,500 |
| 42 | Pilankalai | Little Flower | |
| 43 | Pilankarai | Loretto Matha | 3,390 |
| 44 | Pudur | St.Thomas | 1,000 |
| 45 | Puliyarai | Little Flower | 3,750 |
| 46 | Soosaipuram | St. Joseph's | 8,800 |
| 47 | Thackalivilai | Holy Family | 2,150 |
| 48 | Thadickarankonam | St. Joseph's | 2,500 |
| 49 | Thettiyode | St. Paul's | 2,500 |
| 50 | Thettivilai | St. Michael's | 2,500 |
| 51 | Thuckalay | St. Mary's | 1,210 |
| 52 | Vanchinagar | Loretto Matha | 3,750 |
| 53 | Varuthattu | St. Xavier's | 5,250 |
| 54 | Vayalinkarai | St. Antony's | 6,000 |
| 55 | Valan Nagar | St. Joseph's | 5,873 |
| | | **Total** | **316549** |

### இதர செய்திகள்

அயர்லாந்து நாட்டுக்கு, மேய்ப்புப்பணிக்காக சென்றிருக்கும், அருட்தந்தை ரோபின் கூறுமுள்ளில் அவர்களின் முகவரி

St Joseph's, Lifford Avenue, Ballinacurra, Limerick, Ireland. தொடர்பு எண்: 00353894333124.

அருட்தந்தை பிரின்டோ குரியாஸ், செறுவாரக்கோணம், சி.எஸ். ஐ. சட்டக்கல்லூரியில் சேர்ந்துள்ளார்.

## KANYAKUMARI : U.C.C ZONALS-2016

| SL NO | VATTARAM | CONTACT PERSON<br>CONTACT NO | MEETING<br>Date & Time |
|---|---|---|---|
| 1. | Anjukramam | Pr. S. A. Rajan<br>9842382501 | I Monday 4pm |
| 2. | Kadamalai kuntu | Pr. P. Edwin Robert<br>9443559648 | I Monday 5pm |
| 3. | Karungal | Fr. John kumar<br>9486177900 | III Monday |
| 4. | Kaliyakkavilai | Mr. P. S. Bennet<br>9788689924 | Last Mon. 5pm |
| 5. | Kottaram | Evg. Nithya Chandran<br>9443870620 | Last Mon. 4pm |
| 6. | Kulasekaram | Pr. Rajendran<br>9443692534 | I Sunday 4pm |
| 7. | Manavalakurichy | Rev. S. Alel Raj<br>9488290928 | I Sunday 4pm |
| 8. | Arumanai | Mr. Stephen<br>9442250111 | III Sunday 5pm |
| 9. | Marthandam | Rev. Dr. Kingsly Chellan<br>9488274557 | III Sunday 5pm |
| 10. | Melpuram | Rev. K. Birght Davis<br>9443118749 | Last Sun. 5pm |
| 11. | Nagercoil | Rev. Dr. D. Cecil Raj<br>9344430777, 04651-253077 | II Sunday 5pm |
| 12. | Neyyoor | Mr. Deva Raj<br>9047479981 | II Sunday 5pm |
| 13. | Puthukkadai | Rev. Yesudhas<br>9789638006 | II Sunday 5pm |
| 14. | Puthalam | Pr. Alexander | II Sunday5pm |

| | | | |
|---|---|---|---|
| | | 9360505510 | |
| 15. | Thuckalay | Fr. Jesu Retnam<br>9442788275 | II Sunday 5pm |
| 16. | Thitthuvilai | Mr. Josephin Albert<br>9629605117 | II Sunday 5pm |
| 17. | Vavarai | Fr. Shelly Rose<br>9487291004 | III Monday 5pm |

## UCC- Meetings- Participation

| | | | |
|---|---|---|---|
| 1. | Anjugramam | - | St. Thomas Church, Anjugramam, Maharajapuram |
| 2. | Kadamalai Kuntu | - | Pilankalai Forane, except Chenancod, Kulasekaram, Nagercoil |
| 3. | Karungal | - | Soosaipuram Forance Churches |
| 4. | Kaliyakkavilai | - | Padanthalumoodu Forane |
| 5. | Kulasekaram | - | Chenancode, Kulasekaram |
| 6. | Arumanai | - | Manjalumoodu and Arukany Foranes |
| 7. | Marathandam | - | Kuzhithurai, Marathandam |
| 8. | Nagercoil | - | Nagercoil Alphonsa Church |
| 9. | Puthukkadai | - | Munchiri Church |

### காரோடு தூய சூசையப்பர் ஆலய அதி தூயகம் அர்ச்சிப்பு

1970ஆம் ஆண்டு மார்ச் மாதம் அருட்தந்தை ஜோசப் மடத்தில் அவர்களால் 10 குடும்பங்களோடு தொடங்கப்பட்டு காரோடு தூய சூசையப்பர் ஆலயம் 1999ல் தனிப்பங்காக உயர்த்தப்பட்டது. புதிய ஆலயத்திற்கான அடிக்கல் 2000 ஆம் ஆண்டு ஆகஸ்டு 15 மரியாவின் விண்ணேற்பு திருநாளன்று இடப்பட்டு 2001 நவம்பர் 25 கிறிஸ்து அரசர் திருநாளன்று தற்போதைய கர்தினால் மார் ஜார்ஜ் ஆலஞ்சேரி அவர்களால் அர்ச்சிக்கப்பட்டது.

தற்போது அருட்தந்தை ஜேம்ஸ் அவர்கள் தலைமையில் ஆலயத்தின் மதுபகா இடிக்கப்பட்டு புது வர்ணத்தில் புதிதாக புனரமைக்கப்பட்டு 2016 நவம்பர் 29ஆம் நாளன்று ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்களால் அர்ச்சிக்கப்பட்டது.

## BISHOP'S ENGAGEMENTS
## JANUARY 2017

| | | | |
|---|---|---|---|
| **1** | **Sun** | **04.30 pm** | **Penu: Blessing of Church and Chavara feast** |
| 2 | Mon | 10.00 am | Thoothukuddi: Funeral of A.bp. Peter Fernando |
| 3 | Tue | 06.30 am | Thuck: St. Chavara feast Qurbana – CMC Convent |
| 4 | Wed | 09.30 am | Annikkarai: Curia meeting >> Changanaserry |
| 5 | Thu | 10.30 am | Poonthoppu: Marriage Qurbana |
| 6 | Fri | 06.00 pm | Thuckalay: Bhagavad Gita Discourse |
| 7 | Sat | 09.00 am | Sangamam: CRI Inauguration |
| | | 03.00 pm | Palliady: First Communion |
| | | 05.00 pm | Mukkoottukal: Feast Day Qurbana |
| **8** | **Sun** | **12.00 pm** | **Changanassery: Marriage at Cathedral** |
| 9-14 | Mon | | Synod at Kakkanadu |
| 14 | Sat | | Synod at Kakkanadu>>Thuckalay |
| **15** | **Sun** | **04.00 pm** | **Nattalam: Feast of Bl. Devasagayam Pillai** |
| 16 | Mon | 09.00 am | Sangamam: Pastoral Council >> Bangalore |
| 17 | Tue | 10.00 am | Bangalore: Dharmaram >> Hosur TNBC |
| 18 | Wed | 06.00 am | Hosur: TNBC Meeting |
| 19 | Thu | | Hosur: TNBC Meeting >> Chennai |
| 20 | Fri | | Chennai >> Thuckalay |
| 21 | Sat | 09.00 am | Mukkoottukal: Class for SH Sisters |
| | | 03.30 pm | Sangamam: Pongal Celebration - Thuck. Friends |
| | | 05.00 pm | Padanthalumoodu: School Day Celebration |
| **22** | **Sun** | **09.00 am** | **Kaisalavilai: Pastoral visit** |
| 23 | Mon | 11.00 am | Changanassery: Marriage at Thrikkudithanam |
| 24 | Tue | 09.30 pm | Sangamam: Priest Conference |
| 25 | Wed | 09.30 am | Manchalumoodu: Curia Meeting |
| | | 04.00 pm | Nagercoil: School Annual Day Celebration |
| 26 | Thu | 02.00 pm | Sangamam: Class for Sisters |
| 27 | Fri | 09.00 am | Soosaipuram: School Annual Day Celebration |
| 28 | Sat | 10.00 am | Soosaipuram: SABS Sisters' Jubilee Qurbana |
| | | 03.00 pm | Thettiyode: Aseer Silver Jubilee Celebrations |
| **29** | **Sun** | **08.00 am** | **Plankalai: Pastoral visit** |
| 30 | Mon | 11.00 am | Changanassery: Marriage Qurbana at Maamoodu |

**Fr. Thomas Sathianesan**, *Eparchial Secretary*



Diocesan Convention



Karunai Illam - Silver Jubilee Inauguration



Killiyoor Kinder Garten - Christmas Celebration



கடந்த மூன்று ஆண்டுகளாக, தூய மரியா இளங்குருமடத்தில் ஆன்மீக வழிகாட்டியாக பணியாற்றிய Fr. தோமஸ் பால் உழும்பக்கல் அவர்கள் டிசம்பர் 4, 2016 அன்று இறைவனடி சேர்ந்தார். இவர், நீண்ட காலம் மங்கலப்புழா தூய யோசேப்பு உயர் குருமடத்தில் பேராசிரியராக பணியாற்றியவர். அன்னாருடைய ஆன்ம இளைப்பாற்றிக்காக செபிப்போம்.





2013, டிசம்பர் 14 ஆம் தேதி இறைவனடி சேர்ந்த அருட்தந்தை தோமஸ் தெக்கேல் அவர்களின் மூன்றாம் ஆண்டு நினைவு திருப்பலி அவருடைய தாய்பங்கான மாங்குளத்தில் வைத்து அர்ப்பிக்கப்பட்டது. ஆயர் மார் ஜார்ஜ் ராஜேந்திரன் அவர்கள் திருப்பலிக்கு தலைமை ஏற்றார்கள்.





ஏழைகளின் தாய் என அழைக்கப்பட்ட அருட்சகோதரி மேரி லிட்டி எல்.எஸ்.டி.பி அவர்கள் நவம்பர் 5, 2016 அன்று காலமானார். அவருடைய சபையைச் சேர்ந்த அருட்சகோதரிகள் பணியாற்றும் பெருஞ்சிலம்பு ஆதரவற்றோர் இல்லத்தில் வைத்து நினைவு திருப்பலியானது, தக்கலை மறைமாவட்ட குருகுல முதல்வர் அவர்கள் தலைமையில், டிசம்பர் 13, 2016 அன்று நிறைவேற்றப்பட்டது.




# DB Tech

An Initiative of the Diocese of Thuckalay

இலவச பயற்சி மற்றும் வேலைவாய்ப்பு

பாடங்கள் IT, Sales and Retail & Hospitality

சிறப்புப் பயிற்சிகள்: இலவச கணினி & ஆங்கிலம்

பயிற்சி காலம்: 3 மாதங்கள்

பயிற்சி மைய முகவரி

DB Tech

புனித ஜார்ஜியார் ஆலயம்

முஞ்சிறை, புதுக்கடை 629171, குமரி மாவட்டம்

தொ.பே: 04651-235277



For Private Circulation only

IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay

Published by: Fr. Joseph Santhosh for the Diocese of Thuckalay,

Bishop's House, Post Box No. 12, Thuckalay - 629175

Printed at: Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570